575

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

ஹஜாத் முஹம்மது அன்பியாதுதி என்னும்

# ஆனந்தச் சங்கீதம்.



பாப்பன்பட்டி,

ரா. இ. சேகுமதார் (பாவலர்) அவர்கள்

இயற்றி,

பழனி, ஸ்ரீ ஷண்முகானந்தம் பிரஸில்

அச்சிட்டது.

---

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

(1934) [அணா 6.

Q7:417
N34.
172191

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம்.

OFFICE OF THE

ஹஜரத் முஹம்மது

அன்பியாதுதி என்னும்

# ஆனந்தச் சங்கீதம்.

இஃது

கோலாலம்பூர்,

மனோன்மணி விலாசப் புத்தகசாலையாரால்

கேட்டுக்கொண்டபடி,

பழனித் தாலூகா,

பாப்பன்பட்டி,

ரா. இஸ்மாயில்மீரு ராவுத்தர் அவர்கள் குமாரன்,

ரா. இ. சேகுமதார் (பாவலர்) அவர்கள்

இயற்றி,

பழனி,

ஸ்ரீ ஷண்முகானந்தம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

இதன் விலை] (1934) [அணா 6.

(மெட்ராத்தி ஜெமீன் சமஸ்தான வித்வானும்,)
கணியூர், சமரச சன்மார்க்க சங்கத் தலைவருமாகிய,
கணியூர்,
பண்டித ஜனாப்,

**K. அப்துல் சுக்கூர் அவர்கள்,**

எழுதிய சாற்று.

---

### நேரசைக் கட்டளைக் கலித்துறை.

நத்திருக் குஞ்சுவை நீராற் பொலிவயல் நன்மருங்கின்
முத்திருக் கும்பாப்பு மாநகரின் முஷிலிங் களின்சீ
ரொத்திருக் குங்கல்வி யோங்கு மறிவா லுயர்ந்த நல்லோன்
கொத்திருக் கும்புய வேதாம்பர் கீர்த்தி குலவிடவே

பூவிற் சிறந்திடு தாமரை போலுமிப் பூவினில்கற்
காவிற் சிறந்திடு கற்பகம் போலுங் கவின்சுவைசேர்
பாவிற் சிறந்திடு மானந்த சங்கீதப் பாநவின்றுன்
நாவிற் சிறந்திடு சேகும தாவுநன் நாவலனே.

---

கணியூர்,
எய்டெட், இஸ்லாமியப் பாடசாலை
தலைமையாசிரியர்,
**P. S. M. E. முகம்மது யாக்கூப்**
அவர்கள் எழுதிய சாற்று.

---

## நேரசைக் கட்டளைக் கலித்துறை.

வேதங்களிலே சிறந்தது குர்ஆனும் வேதமில்லாம்
மாதங்களிலே சிறந்தது ரம்ஷானும் மாதமைந்து
பூதங்களிலே சிறந்தது வாயுவாம் பூதநற்சங்
கீதங்களிலே சிறந்த தானந்தசங் கீதமதே.

## அறுசீர் விருத்தம்.

கண்டிருக்கும் பெட்டியென்கோ கனியிருக்கும் சோலை
களிக்கும்பைந்தேன் [யென்கோ
கொண்டிருக்கும் கூடென்கோ கரும்பிருக்குங் காடென்கோ
குலவுஞ்சீர்த்தி
யுண்டிருக்கு நபிகள்பிரான் ஒளியிருக்கும் பெரியோர்கள்
உரையின்னேர்மேல்
வண்டிருக்குந் தாருடையான் மதியிருக்கும் சேகுமதார்
வரைந்தநூலே.

---

# மதிப்புரை.

திண்டுக்கல், 'சன்மார்க்கன்' ஆசிரியர்
## திரு. சுவாமி சிவநேசம் அவர்கள் எழுதியது.

பழனித் தாலூகா, பாப்பன்பட்டி ஜனுப், ரா. இ. சேகுமதார் (பாவலர்) அவர்கள் இயற்றிய ஹஜரத் முஹம்மது அன்பியா துதி என்னும் ஆனந்தச் சங்கீதம்! நூலை பார்வையிட்டோம். இந்நூல், ஆண்டவன் புகழ்மாலையாக சன்மார்க்கத்தையும், அன்பையும் அடிப்படையாகக் கொண்டு பல வர்ணமெட்டுகளடங்கிய கீர்த்தனைகளால் பாடப்பெற்றுள்ளது. ஆகவே, இஸ்லாம் நண்பர்கள் இவ்வினிய கீதங்களைப் பாடி மகிழ்ச்சி யுறுவார்களென்று நம்புகின்றோம்.

ஜனுப், ரா. இ. சேகுமதார் (பாவலர்) அவர்கள் நபிகள் நாயகம் அவர்களின் திருவருட் கருணையினால் இஸ்லாமார்க்கத்துக்கு அரிய தொண்டாற்றி வருவதுடன் நம் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் இன்னும் இதுபோன்ற நூல்கள் வரைந்து வெளியிடுமாறு அவர் தம் முயற்சியைப் பாராட்டுகின்றோம்.

முகாம் நாவலூற்று.
4—9—34

அன்பமர்,
சுவாமி சிவநேசம்.

# முகவுரை.

உலகெலாம் அறிந்தோதித் தொழுதற் குரியோனும் எல்லாம் வல்ல வண்மை வாய்ந்தவனும் சர்வலோக ஜீவரக்ஷகாதிபதியுமாகிய அல்லாஹுத்த ஆலாவுக்கே புகழ் அனைத்தும் உரியனவாம்.

ரூபாரூபியாகிய அவனது சர்வ லோகப் படைப்புகளுக்கெல்லாம் மூலகாரணரும், அவனது கிருபையன்பைப் பெற்றவரும், நபிமார்களுக்கெல்லாம் நாயகமானவரும், (பல பேததெய்வ விக்ரக ஆராதனை, முரட்டுக்குணம், இருள் நெஞ்ச ஊக்கம் ஆகியவைகளும் பிறவுமான மாறுதல்களைப் போக்கி ஏக தெய்வ பக்தி, ஜீவகாருண்யம், சகோதரத்துவ முதலாகியவைகளை நிலைநாட்டி, பொதுவாக மக்களுக்கு இகபரசுகங்களுக்குரிய நற் சாசனங்களையும் தம்முள் அடக்கிக்கொண்டு பிரகாசிப்பதும், வேதங்களுள் இறுதிமறையாகவும் மஹா சிரேஷ்டம் வாய்ந்ததாகவும் விளங்கி, பேணல் விலக்கல்களை வற்புறுத்தியறைந்து ஆட்சிபுரியும்,) குர்ஆன்சரீபின் றசூலரும், இருலோக மகுடாதிபதியுமாகிய நபிகள் பிரான் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (இவர்களுக்கு இறைவனது அருளன்பும் நன்மாராயமும் என்றென்றும் உண்டாவதாக) அவர்களைப் போற்றிப் புகழ்தற்குரிய அரபிபாஷையக்ஷரங்களைத் தழுவியுள்ள பார்சி, ஹிந்தி, உருது ஆகிய பாஷைகளிலும் பல வகைகளாகவும் (பைத்து) இசைக் கீதங்களாகவும் புகழ்ந்து வருகின்றனர்.

தமிழைத் தாய்ப்பாஷையாகக் கொண்ட நம் தென்னிந்தியாவில், அத்தகைய பாஷைகள் மிகக் குறைவாயிருத்தலால் நபிமார்கள் முதலாக மஹான்களை கீதரூபங்களாகப் போற்றிப் புகழ்தல் அவ்வளவு விஷேடந் தராதென்று மார்க்க விஞ்சையின் அரபிக் கலா நிபுணர்களிற் சிலர் அபிப்பிராயமென்று அறிகிறோம். எனினும், கலை வல்லுநர் பலர் நம் நாட்டிற்கு தமிழே தாய்ப் பாஷையாயிருத்தலாலும் சொந்தக் குடும்பங்களிலும், தென்னிந்தியா ஜனங்கள் அனைவோரிடத்திலும், கொடுக்கல் வாங்கல் ஆகிய வியாபாரத் தலங்களிலும் கணிதக் கணக்குப் பேரேடு முதலாகிய ஜீவனும்ஷத்திற்குரிய சர்வ நிருவாகப் பொருப்புகளிலும், தமிழ்ப் பாஷையினை முக்கியமாக வழங்குதலால், நம் இஸ்லாமிய மஹான்களின்மீது சங்கீதப்பாக்களாக புகழ்வதும் ஆகுமென்றும் தீர்மானித்து அரபியிலும் தமிழிலும் தேர்ந்த முற்காலத்தினரும் சமீபகாலத்தினரும் ஆகிய பக்த வித்வ சிரோன் மணிகள் சிலர், மார்க்கநெறி விதிவிலக்குகளாகவும், (மதுஹபுகளின் ஹ…க்கும்) வேதாநுஷ்டான உட்பிரிவின் பக்திநூல்களாகவும், இஸ்லாமிய மார்க்கத்தினர் சரித்திரசம்பந்தமாகவும், நபிகள்பிரான்மீதும் நாதாக்கள்மீதும் துதிநூல்களாகவும் முத்தமிழினும் பலவகைக் கிரந்தங்கள் இயற்றியுதவியுள்ளனரெனினும், தற்காலத்திற்கேற்றவிதமாக நாகரிக இசையில் நபிகள்பிரான் முதலாக மஹான்களின்மீது சங்கீத நூலொன்று இயற்றியுதவும்படி பல முஷ்லிம்கள் எம்மைக் கேட்டுக்கொண்டேயிருந்தனர்.

எனவே, நாம் அத்தகைய ஆற்றலுடையேமல்லோமாகினும், எளியேன் எம்முடைய சிற்றறிவுக்கு எட்டியவரையும்

காலத்திற் கேற்றவாறு நவநவமாகிய இசை இராக தாளங்களில் நமது நபிகள் பிரான்மீது இயற்றி, ஒவ்வோர் கீர்த்தனைகளின் தலைப்பிலும் அதற்குரிய வர்ணமெட்டுகளையும், அத்துடன் இராக தாளங்களையும், இயன்ற மட்டிலுங் குறித்து (மலாய்நாட்டில் 1922-வது வருடம்) பயஹூராம்பர் துதி என்னும் பதானந்தக் கீர்த்தனமெனத் தலைமைப் பெயர் புனைந்து வெளியிட்டுள்ளோம். ஆகவே, அதன் இறுதி பக்கத்தில் அன்பியா துதி என்னும் ஆனந்தச்சங்கீதம் இயற்றிப் பிரசுரிப்பதற்கும் இறைவனைப், பிரார்த்தித்திருப்பதுடன் அதனை வாசித்தறிந்த பின்னர் அதன் இறுதியிற் கண்டுள்ள கீர்த்தனையை இயற்றி பிரசுரித்துதவும்படி நம் முஸ்லிம்களில் அநேகர் எம்மை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர்.

பின், நாகரிகம் முதிர முதிர, இஸ்லாமிய மார்க்கக் கல்விகளைப் பயின்றவர்களுங்கூடசிலர் இந்துஸ்தான், பார்சி, ஆகிய டிராமா வர்ணமெட்டுகளில் மௌலீது சரீபுகளை இசைத்து ஓதிவருவதுடன், இளைஞர்கள்பலரும் டிராமா (கூத்து) மேடைகைகளிலும் பஜனைக் கூடங்களிலும், (பயாஸ்கோப்) சினிமா படக்காக்ஷிகளிலும், ஹிந்துமத புராதன சரித்திர சம்பந்தப்பட்ட கதாநாயகர்கள்மீதும், மஹான்கள்மீதும் கோஷிக்கும் கீதவசப்பட்ட (நம் முஸ்லிம்களுக் குரிய மார்க்க ஆச்சாரங்களை யுணரா) எம்போலியர்களில் சிலரும், (பொதுப் புலவர்களைப்போல்) தாமும் அவைகளைப் பாடி மகிழ்ச்சியடைகின்றனர். அத்தகைய முஸ்லிம் நண்பர்கள், நபிகள்பெருமான் அவர்களையும் இஸ்லாமிய மஹான்களையும் புகழ்ந்து பாடி மகிழ்வது சாலவும் சிறப்பெனத்தெரிந்து, பின்னும் தற்கா

லத்திற்கேற்ற நூதனமாகிய இராக தாளங்களில் இயற்றி ஹஜாத் முஹம்மது அன்பியாதுதி என்னும் ஆனந்தச் சங்கீதம் எனப் பெயர் புனைந்து, இந் நூலையும் வெளியிட்டுள்ளோம். ஆகவே, முத்தமிழினும் வல்ல அறிஞர்கள் முன் மிகவும் அறியாத நாம் இயற்றிய இந் நூலில் இயற்கையாக மக்களுக்குரிய ஞாபகக்குறைவாலும், சங்கீதங்களுக்குரிய விதிகள் இலக்கண இலக்கியங்களும், பிறழ்ந்தும் வல்லின மெல்லினங்களுமாகிய அக்ஷர பேதங்களும், தொடர்புகளும் அச்சுப் பிழைகளுமிருக்கக்கூடும். ஆதலின், கல்வியறிவுகளிற்சிறந்த பக்த சிரோன்மணிகள் அவைகளை மன்னித்து, அன்னப் பக்ஷிபோன்று இந்நூலின் கருத்தை யநுசரிப்பதுடன் இச்சிறிய நூலையுமேற்று ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

எனினும், (இன்ஷா அல்லாஹ்) இனி மறுபதிப்பிற்கு இயன்றவரையும் பிழைகளைத் திருத்தியமைத்து அச்சிடுவதுடன் (தாஷுல் அன்பியாதுதி என்னும் சங்கீத ரத்னம் எனப் பெயர் புனைந்து இயற்றி) இந் நூலின் 2-ம் பாகமாகப் பிரசுரித்துப் போற்றுதற்கும், நீண்ட ஆயுளையும், திருவாரறிவூக்கத்தையுந் தந்தருள் புரியும்படி சர்வலோக ஜீவரக்ஷகாதிபதியாகிய அல்லாஹுவத்த ஆலாவையும் அவனது திருத்தூதரையும் பக்தியாச்சார கிரமநெறியாய்ப் போற்றிப் புகழ்வோமாக. ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

ரா. இ. சேகுமதார்,
பாப்பன்பட்டி, P. O.
பழனி; (S. I.)

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம்.

786

ஹஜரத் முகம்மது

அன்பியா துதி என்னும்

# ஆனந்தச் சங்கீதம்.

காப்பு.

திருமருவத் தாதனுவா மதிபெல்முழு வத்துவெலாஞ்
சிரிட்டித்துய்தி
பொருணுகர விதரணமன் பொறிதனுவுஞ் சங்கதமாப்
பொருந்திநாளும்
பருவதிணை யிகபரமும் பூரணவி யாபகமா
வண்மை யார்ப்ப
வருவுருவா யொளிர்காவன் முதலவனைத் தொழுதுநெஞ்
சகத்தே வைப்பாம்.

---

வேறு விருத்தம்.

தாயனையுபயாதீத தனிவெளி யகண்டாகார
நேயனைக்கணிக்க வொண்ணு நிருமல சொருப யேக

மாயனைக்கற்பிதத்தும் மதித்திடாகுதரத்தாரும்
தூயனையுவந்து நாளும் அணியணிதொழுதல் செய்வாம்.

---

## ஹஜரத் அகமது அன்பியாமீது சந்த விருத்தம்.

பண்டனுதியருள் தங்குநான்மறைப டர்ந்தபூககன
மெங்குநேர்
விண்டனுகரிக குப்பர்மீழ்பெற விளம்பிதீனெறி
துலங்கவே
மண்டலாதிபர்கள் தந்துபூமிதிரை வந்துமாமுடிப
தந்தொடாய்
அண்டர்வாழிமொழி கின்றகோவகம தன்பியாகழல்
வணங்குவாம்.

---

## வேறு சந்த விருத்தம்.

அரியமுதலவ னிலவுபலவுல கருளிசதுர்மறை தீனைநேர்
புரியஉதவிட குபிரினிருளறு புனிதமறைநபி கோவுமா
யுரியபணிதிரை தரவுமொருகுடை யுலகமுழுது வியர்பராம்
துரியமுழுமணி யகமதிறைகழல் தொழுதுமகிழ்வொடு
பேணுவாம்

---

## குதுபு
## முஹய்யதீன் ஆண்டகையின்மீது விருத்தம்.

மதுமலர்ச் சொரிதண் டலை யணிமக்கா மாநகர் குறைஷியின்
குலமா
முதுநபி வழியாய் அப்துல்லாதவச்சேய் முகம்மதுநபியின்
சந்ததியாய்

பதுமநன் னிதியாய் உலகெலாம் புகழும் பகுதாது அரசுதீன் மணியாய்

குதிபுகட் கரசர் விளங்கு முஹய்யதீன் குருபதம் சிரமிசை கொள்வாம்.

---

திருநாகூர் ஷாகுல் ஹமீது ஆண்டகை யவர்கள்மீது

வெண்பா.

சிரமிசை வைத்து செய்பனுவ லுக்குநய
வரமிசைபத் தருகுவர் வண்ணருளார்—புரவலர்மன்
காகுளினைத் திருநாகை யதிநீதக் காரணமெய்
ஷாகுல்ஹ மீதர்செஞ் சரன்.

---

(திருவுற்றி லகுகங்கை என்ற வர்ணமெட்டு.)

இராகம்-பியாக் தாளம்-சாப்பு.

அருள்மிக்க அரவிந்த திருமுத்து முளையுந்ததும்
அருவிக்க யல்குறிஞ்சிப் பாகமாம்— அல்லி
மருவித் தளிர்தகுந்த டாகமாம்— மழை
யாரமாதுளே மாபலாகமை பூகதர்மைய சோகுவாழையும்
அரசிச்சி கனிவிண்டு வானமாம்— தளிர்
புரசத்தி கமிழ்யென்றல் கானமாம்.

மருமொக்குள் மகரந்த துளிசொட்ட மலர்பிஞ்சு
வால்முத்த விளைகின்ற சாலமாம்— கனி

திரளூற்று முதிர்விந்தை கூலமாம்— அடர்
வாசமாடல்மை யூரகோகில காககீரமை ணுபுராகனி
மதுரச்சுவையருந்தி யாடுமாம்— புள்கள்
இதழ்புட்ப மதுவுண்டு பாடுமாம்.

புதுமைத்தடவனங் கொள் வளமக்கா நகர்சந்த
புரிசைப்பதியுகந்த நாதரை— ஞாய
வரிசைத்தனம் விளங்கு நீதரை— ஒரு
போதுமே மறவாத பூஜித தாஷர்சேவைசெய் கீதகாவிய
புனிதத் தளிமகந்த தோளரை— அறு
தினநத்துமறையின்த யாளரை.

முதுவுற்ற நபிதுங்க ஒளிர்நெற்றி வழிவந்த
முழுமுத்து மணிபொன்கி ரீடரை— இடர்
பழுதற்ற தவிசும்பர் பீடரை— மஹா
மூதுமாதுனி யாலபூபதி தீனுதாரகு தாகுரானெனும்
முகவித்த கம்விளம்பும் வாயரை— ஆதி
ரஹமத்து மலிகின்ற தூயரை.

மதபெட்பு மொளிர்திங்கள் வதனத்தி னிதழ்செம்ப
வளமுத்து நிகர்தந்த வாயரை— பரி
மளமொய்த்த புயகும்ப நேயரை— நறு
வாடை மான்மதமாரதார்கன தாரபூதொடை சீதமேழ்குடை
மருவத்திரல் மிகுந்த தேகரை— தினம்
கருதற்குரிய விஞ்சை யோகரை.

சிதமுற்ற களிறெங்கள் நபியற் புதம் விளம்பி
திகழக்க விபுகழ்ந்து பாடவே— யக
மகிழத் தமிழ்சுரந்து கூடவே— புகல்
தேவை சேகும தார்சதாபெற கார ணுகரு ணுகரா அருள்
ஜெகமுற்று மருவுந்தெய் வீகனே— தூய
அகமெற்கு முதவுந்தி யாகனே.

——

(வேலனே இந்த வீணனை என்ற வர்னமெட்டு.)

இராகம்-தேசிகதோடி தாளம்-ரூபம்.

பல்லவி.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம் என்று
பேசித்தின மாகத்தனை பூஜித்திடு வோநித்தமும் (பி)

அனுபல்லவி.

இஸ்மில்திகழ்வோனை ஹில்மெல்லாம் நிகழ்வோனை
இதமாவது நிதயாமொழி ரஹ்மானதி திருநாமமே (பி)

எல்லாப் புகழ்ச்சியும் அல்லா உனக் கென்று
இருதயத்தெண்ணிப் பணிபனுவல் விண்டு
சொல்லுமொழிமுற்றும் வல்லோனின் பரமென்று
துதியுந்திடு வரிதொண்டர்கள் சதியும்பெற நிதமும் புகழ் (பி)

எண்ணஞ்செயல் மொழியாலும் வருங்குறை
யெல்லாம் பொருத்தருள் யேகாதி யோனிறை
புண்ணியவேத புருக்கான் திருமறை
புகழ்விண்டிட நிசமும்பவம் அகலும்படி நிதமுஞ்சொலு (பி)

அல்ஹம்துலில்லாஹி யாறப்பில் ஆலமீன்
ஆலமெல்லாந்தனி யாட்சிபுரியுங் கோன்
குல்ஹு வல்லாஹுவா யெங்கு நிறைந்த தீன்
குருவேதமன் நெறிநீதனை தொழுவேளையு முதலேமொழி (பி)

ஏவல்விலக்கல் அறிந்துநல மான
எக்காரியத்திற்கும் ஹக்கன்பில மான
காவல்மெய்யென்று கருத்தில்திட மான
கதிதீன்மறை யுபதேசநன் மொழிவாயுரை நவில்வோ
முதல் (பி)

அன்னைபிதாவிலும் மன்னுஞ் சகாயன்
அடங்கலையும்பரி பாலிக்குந் தூயன்
தன்னையறிவோர்க்கும் தண்ணருள் நேயன்
தனிமாமுதல் இறையோனருள் புரிமாமறைத்
துதியோதவும் (பி)
சாகரம்பூவிசும் பெங்குந்நிகழ் வோனை
சர்வமும் கற்பித்து ரட்சிக்குப்சீ மானை
சேருமதார்துதி செய்கும்ரஹு மானை
சிதமேயருள் நலமாமுறை முறையாயனு தினமேயுரை (பி

---

வெண்பா.

திருவாரு மக்காநகர் க்ஷேமக் குறைஷிகுல
முருவாகி வந்ததீ னுத்தமராம்—பொருவாரும்

சற்குருவை யானந்த சங்கீதத் தும்பணிய
எற்குதவி யாளுமிறை யே.

——

### கலித்துறை.

தேடற்கரிய சதுர்புருக் கானின் திருமறையை
நாடற்குரிய விதமாக்கி தீனினை நாட்டிவைத்து
வேடற்குதவு மெஞ்ஞான உபதேச வேந்தரேயென்
பாடற்கருளும் பயகாம்பரா முஸ்த பாநபியே.

——

(வனசாக்ஷி என்றவர்ணமெட்டு)
இராகம்-சஹாண தாளம்-ஆதி.

பல்லவி.

மஹாப்ரபூதா விண் மகிதலந் துதிநபி (ம)

அநுபல்லவி.

மதிமிகுந்த வதனதுங்க
மலிசுகந்த மதினசிங்க (ம)

சதுர்மறை புருக்கான் சரஹின் விநோதா
தனிமுதல்யாகு தாவுருள் தூதா
மதுமலர்சொரியுமக் காபுரி நீதா

வனசநீத மலரின்பாத
சுருதிபோத சுகிர்தவேத (ம)

மண்டலர் போற்றிடும் மகிமை விலாசா
மணங்கமிழ் சீர்கதி ஜாமகிழ் நேசா
விண்டலர் வாழ்த்திடும் மேதைவி சேஷா
வேதவாச விழப்புலாச
ஜோதிநேச சுயம்ப்ரகாச (ம)

ஜெகமிதிலெளியேன் செய்பிழை தீர்ப்பீர்
சேகுமதார்க்கும தருள்விழி பார்ப்பீர்
மகுஜரிலிறையைமன் ருடியுங் கேட்பீர்
வணக்க மேர்ப்பீர் வாழ்வில்ச் சேர்ப்பீர்
முடக்கை மீழ்ப்பீர் முஸ்தபாப்பீர் (ம)

——

(அம்மா மதுரைமீனுக்ஷி.)
இராகம்-தேசிகம் தாளம்-ஆதி

திரு மக்காமதினப் பரிபாலா மஹா
மூதரான சீலா செங்கோலா
மறைமுளங்கு மூலா
மகிமையனு கூலா மகி (தி)

இனி—எக்காலத்தினுமற வேனே யும
திணையடிமலர் தானே சீமானே
யிதுதிபணிந் தேனே
எனக்கருளுநங் கோனே எனக் (தி)

தின்—பூராயசதுர்மறை வேதா புவனம்
போற்றும்ஞானப் போதா விநோதா

புகழணிமலர்ப் பாதா
புனிதயது மூதா புனித (தி)

துதி—சீரார் செந்தமிழ்துதி யாரம் விள்
சேருமதார்க்கி ளேரம் உதாரம்
செய்குவீரநு சாரம்
திகழுடப காரம் திகழ (தி)

——

(பாசுபதம் போலுமதன்)

இராகம்-இந்துஸ்தான் தேசிகம் தாளம்-ஆதி.

——

பல்லவி

ஆதியருள் வேதமுறை யாரணக்குருவே—பரி
பூரணத் திருவே நனி
யடர்மழைக்குடை இடுமெழில்த்துரை
திடநிகழ்ப்புய மடல்மறைப்பதம்
ஆதரவினியே மஹா மூதெனுங்கனியே

ஜோதிமணியா யருஷில் துலங்கிடுமொளிவே யார்க்கு
நலந்தருந் தெளிவே சுப
சோபனந்திகழ் வேதரஞ்சித
பாதபங்கய தீன்மணங்கமிழ்
சோபிதவணியே நலந் தாபித வணியே

தேனிலவுமா மதிநு திருநகர்க்கோமா—சீத
நருமலர்த் தாமா பல

தீதிடுந்துனி யாலவஞ்சக
கோதறும்படி யாளுமெந்தனை
ஜெயசிங்கமேமே நீத ஜாயந்திகழ்பீரே

மானிலத்தில் சேருமதார் வணங்கிடும்வேதா—ஆதி
மணங்கமிழ் போதா தீன்
மார்க்க நன்னெறி யார்க்குமன்னிட
சேர்க்குமண்ணலே தீர்க்க முன்னிட
வழியினிதாலே யருள் பொழியிறசூலே (ஆதி)

---

(எதிரே வரவேண்டும்)
இராகம்-கமாஸ் தாளம்-ஆதி.

---

பல்லவி.

பதியே தரவேண்டும் தீன்
பதவியின் கதியதி (பதி)

பாதபங்கய பாசுரந்துதி
பாடலின்கவி பாசுகந்தபூ (பதி)
பவன சங்கத மருவுகொண்டல
பழனதண்டலே மதின மண்டல (பதி)

பாதுகாவல ரானதீனத
யாளபாலன ராஜராஜபூ (பதி)
பண்டளாவிய சங்கமாமறை
கொண்டதேசிக ரன்பியாஅதி (பதி

பாரிடங்கரை சீலகண்டன
தூதிடம்பெரு மாவிடங்கபூ (பதி)

பவளதகை நிகர்தரும தாமொளிரு
தவளமணி முடிமகுட விகசிதபூ (பதி)

பணிகள் சித்திர கனக ரத்தின
நவமமுத்திய மகுட சற்சித (பதி)

## அநுபல்லவி.

துதிசேர் யா நபியே
சுகமதுர கவியல் நிதியே (துதி)
தூவடம் புரி தோட்டருங்கவி (து)
சோபனம் பிர தாபமங்கள (து)

துறுமன்களறத் தகுபண்டிதர்கள் (து)

துரியமுழு மணிமகுட புரவலர்கள்
சுருதிமுறை கருதுமன ஜனசுகுண (து)
சுபசங்கத அதபுதவா புறஜெக
ஜுலயதண்டமி முறைபணி பூஜிதர்கள்செய் (து)

தொடரதுணைத் தருமதிணைப்
புரிகருணைச் சரணவிணைத் (து)

தூயகா நாயகா
நேயகா தாயகா (பதி)

## சரணங்கள்.

ஆரவாரஅசு ஹாபிசூழ பரி
வாரபீசபிலு மூழதேர்பதுரி

லணிகவனஞ் சென்றீர்—அபூஜஹ்லின்
துணிவதையும் வென்றீர்

அரசுரைந்தீர் திரைவளங்க
முரசறைந்தீர் மறைமுழங்க

அமலநாதா நிமலதூதா
விமலபோதா கமல பாதா

வளமகிமை.

அந்தமிகுங் காப்பொழிலும்
தண்டலையின் பாப்பநகர்
ஆரிவிலாசநல் சேகுமதார் துதி
காரிதயாள றசூல் மஹ்மூததி (து)

—

(ஸ்ரீசிவ ஷண்முக வேலனே)

இராகம்—பாரீஸ்டான்ஸ் தாளம்—ரூபம்.

பல்லவி.

ஆயுமறையின்வி ஞேதரே
ஆதியந்தமான தூதரே
வேயுமுகில்க்குடை நீதரே
வித்தக தீன்மஹ் மூதரே (ஆ)

ஓயா வெறுக்கைவி சாரமே
ஒயும்படிக்குப காரமே
நேயாநுகூலவு தாரமே
நேமந்தருவதும் பாரமே (ஆ)

தீயனிபுலீசு மாயமே
செய்திடுந் தீதரும் சீயமே
ஞாயநிதிச் சமு தாயமே
நாயகமே யருள் நேயமே (ஆ)

பாபம் பாபம் வெகு பாபமே
பண்ணினேன் நான்பரி தாபமே
கோபம்பொருத்துநன் நீபமே
குருவே யருள்ஞான தீபமே (ஆ)

உம்மையன்றிக்கதி வேறுண்டோ
உகந்தெனையாதரிப் பாருண்டோ
எம்மையாளப்பல பேருண்டோ
இம்மை மறுமைக்கும் நீரன்றோ (ஆ)

சீர்பாப்பன் மாநகர் போதமே
சேருமதாரின்சங் கீதமே
நேர்பாயிசைத்துதி நீதமே
நிட்சியம் தந்தருள் பாதமே (ஆ)

---

## விருத்தம்.

தேசுபெறதீன்மறை விளம்புசஞ் சலரகித
செய்குவொலி யாரிபீன்கள்
திகழணியில் ஆலிமுல மாக்கள் மற்றோர்க்குமிறை
தீர்ப்பிடும் மஹாஷர்தனிலே
போசகக் குருபீட வதிகாரம் பெற்றுசெம்
பொன்மவுலி கொண்ட கபியே

பூராய முகிலினங் குடை நிழற்றி டவ்வளரு
புனிதமெய்ஞான வாழ்வே
பாசனமுகந்த நிதி யுமதுசிரு பாகரப்
பதமலர்த் தெப்ப மெளியேன்
பற்றிப் பவக்கடலை நீந்திமோட் சக்கரைப்
பதிசேரக் கருணை நயினம்
சூசனைபு ரிந்துதவி வஞ்சகமி லாமலென்
துயர்நீக்கி யருளவேண்டும்
துதிமாலையுந்துசே குமதாரகந் திகழ்ச்
சேரபனறசூல் முஹம்மதே.

—

(நடந்ததென்ன சொல்லம்மா.)

இராகம்—நாதநாமகிரியை தாளம்—ஆதி.

பல்லவி.

முஹம்மது யாறசூலே—ஈவிர்
மோக்ஷமெய் அன்பாலே (மு)

அநுபல்லவி.

இகம்மதி லெளியேன் யேங்கிச்சஞ் சலமா
யிருப்பதையகற்றுத தென்றன் துற் பலமா
அகமதரே மன தழுக்கின்மும் மலமா
மவைகளைத் தூய்த்தரு ளாக்குவீர் நலமா (மு)

இரவும் பகலுமனத் திருக்கும்வி சாரம்
இன்னல்பலவுங்களைந் தெனக்குப காரம்
பரவஉமதடிமை பாக்கிய தீரம்
பாலித்தருளும் முஸ்த பாவேவு தாரம் (மு)

போதசற்குருநபி புகழ்ந்துமைப் பாட
புன்மை வினைகளன்ற புனிதவி சேட
சாதுசங்கதமுற்று சரணைறக்கொண் டாட
சாவிஹீம் நீதஜன் மார்க்கத்தை நாட (மு)

ககனம்புவி யெவைக்கும் கற்பகத் தருவே
காஷிம்குலக் கொழுந்தின் கமிழ்மண மருவே
திகழ்மதிணு பரிபாலனத் திருவே
சேகுமதார் தொழும் தீன்மறைக் குருவே (மு)

—

(பட்டாபிஷேகம் படைத்திந்த பூலோகம்.)

இராகம்—இந்துல்தான் பியாக் தாளம்—சாப்பு.

—

மக்கம்பிறந்தும தீனத்த ரசென
திக்கெங்கும் போற்றிடச் செங்கோலறைந்த
தீரச்செய சிங்கமே—நனியுப
காரக்குண துங்கமே
தீதகலப் போதப்வர நீதரிடம்
யான்துதி செய்தனன் விண்ணப்பமே

ஹக்கன் அருள்தங்கும் ஆலத்திலும் அஷ்ட
சொர்க்கம் விளங்குந் துரியவதீத
தூண்டாமணித் தீபமே—சதாகாலும்
ஆண்டாளும் பிரஸ்தாபமே
தூயநபி நாயகமே நேயர்பணி
லாஹூத்தின் சோபிதக் கற்பகமே

ஆகிர்மிதாலும் அஜ்ஸாமிலும் நேர்பெற
சேகுமதார் துதி வேதானுகூல

செம்பொன் முடிமன்னரே—ஹாஷிம்குல
துங்கசற் சம்பன்னரே

சேவைசெய்தேன் யாநபியே மாதவத்தோர்
என்னாளும் செய்தவப் புண்ணியமே

——

(ரெகு ராமமூர்த்தினை யானவரும்)
இராகம்—இந்துஸ்தான் அமீர்கல்யாணி தாளம்-ஏகம்

பல்லவி.

சதுர்—வேத முகம்மது பாதம் சந்ததம்
வேண்டு வோம் நெஞ்சே—அநுதினம்
வேண்டு வோம் நெஞ்சே (வே)

அநுபல்லவி.

போதம்விரிமஹா மூதர்பகர்ஞான
பொக்கிஷம் தெய்வீக வாக்கியம் பேணல்
முக்கியமானசி லாக்கியம் மனம்
அக்கியப் போதநல் பாக்கியம் பெற (வே)

தோஷித்தனத்திபு லீசிடு வஞ்சகத்
துட்டச்செயல்களை நீக்குமே சுப
சிட்டப்பதவியில் சேர்க்குமே நலங்
கிட்டத்திருவருள் வாய்க்குமே சதுர் (வே)

அண்டம்பலபகி ரண்டப் படைப்புக்கும்
ஆதிவித் தானவிண் ணுடராம் ஒளிர்
ஜோதிமுத் தானகி ரீடராம் மறை
நீதிசித் தாந்தவி சேடராம் அந்த (வே)

ஆதியிடத்தில்மன் றூடமகுஷரில்
ஆதிக்கம் பெற்றத யாபதி நலம்
போதிக்கு மெய்க்கரு ணாநிதி யருள்
நீதிக்கும் சேகும தார்துதி தீன் (வே)

(சாமி சோமசேகரனருளும்.)

இராகம்—தேசிகதோடி தாளம்—ஆதி.

பல்லவி

சதுர்—வேத ஞான தீபமே விநோதா நீதா—இந்த
வேளையென்னை யாளுமஹா மூதா நாதா—சதுர்(வே)

அநுபல்லவி.

காதமான்மதங்கமிழ் உதாரணமே எங்கள்
காத்திமுல் அன்பியாநபி யாரணரே ஏழு
சீதமேகம் நீழல்வேயுங் காரணரே சர்வ
தேசபரி பாலனம் செய் பூரணரே வேதத்

திரல்மிகுந்த வதனசிங்க
முஹம்மதுங்க ளதிசுகந்த

தினில்வித்வ யோகபோதம்
வேணுமுக்ய மாகநேர்மை (வே)

(தொகையறு)

பவனசஞ் சாரமுற் றியல்பரவ நியாமாதி
பதமருவ சாஹிநெறியே
பண்ணவர்க் கிறையுமது தெய்வீகத் தண்ணருள்
பாலிப்பீராற்றல் பொறியே

(பாட்டு.)

பாப்பநகர்ச் சேருமதார் பண்பாடியே முஸ்த
பாநபியே யும்மை நிதங் கொண்டாடியே பாது
காப்பருள வேண்டியித்தி னங் தேடியே யிரு
கஞ்சமலர்ச் சேவடிப் பதஞ் சூடியே கோரி
கமிழுங்கதையென் விபரங்தெரிநும்
உறையுங் திகழ அருளுங்கதிநல்
கடனசத்ய விரத சேவை
புனிதர்க்குதவு சுகிர் தக்ஷேமம் (வே)

---

(கல்லோ சொல்லாய் மனது)

இராகம்—இந்துஸ்தான் செஞ்சுருட்டி தாளம்—ரூபகம்.

பல்லவி.

எல்லாம் வல்லோன் நபிநும்
சற்கைப் போதமே யருள்வீர் (எ)

அநுபல்லவி.

சொல்லாலும் ஞாபகம் செய்
தூயோர்விஞ் ஞாபனு மெய்ச்
சல்லாப சோபனு ப்ர
தாபவிரு தாள் தருவீர் (எ)

(தொகையரு.)

திரல்வீரசிங்க அசனுதிபதி யெனத்
திருமகுட மணிமகிபரே
பரமாநுகூல மறைநிலவ யிறையுதவு
பவனபண் ணவ ரதிபரே

(எடுப்பு பல்லவி மாதிரி).

பன்னுள் இன்னுளி னிலும்
பாப்பனூரின் சேருமதார்

(எடுப்பு அநுபல்லவி மாதிரி)

பொன்னருந் தாதுமடல்
பூங்கோவை யாரமா விள்சங்
கீத சாரமா பண்
பூஜிதங்கொள் வேதர்சதா (எ)

---

(தாள்வடந்தக் தென்னேவிடடி)

இராகம்—இந்துஸ்தான்பியாக் தாளம்—ரூபகம்.

பல்லவி.

ஏழையென் சஞ்சலந் தீரையா—இனிமேலேனும்
இன்னருள் திருக்கண் பாரையா

அநுபல்லவி.

ஆழிசூழ்ப்பூ மீதிலேய ஞதியின்தூதாகி வந்த
வாழிமா முஹம்மதேதீ வல்வினையினாலே நொந்த (ஏ)

கந்தமான் மதங்கமிழ் வாசா—சர்வாதிஜீவ
காருண்யச் சுகிர்தவுல் லாசா
வந்தனைசெய் தொண்டன்மீது வள்ளலே மவுனம்வாகா
பந்தபாசத் தால்மெலிந்த பக்தருக்கருள் தியாகா (ஏ)

மங்கையர்பால் சிந்தை நாடுதே—வன் காதற்சண்ட
மாருதச் சுழலில் வாடுதே
வங்கணக்கணிகை மையல் மாற்றிடுஞ்சந் தானமார்பா
பொங்கமேரே சேகுமதார் போற்றிடுமெய் ஞானதீபா (ஏ)

(ராமபஜனே ஹோதியுரம்),

இராகம்—இந்துஸ்தான்சுவாய் தாளம்—ஆதி.

பல்லவி.

ஆலகபியே வர்த்தமா
தெய்விகச் சீமா (ஆ)

அநுபல்லவி.

ஞாலமீதிலே யேழை நம்பினே னும்பொற்றுளை
நலங்கொள் மக் காநகர்ப்பூமா தெய்விகச் சீமா (ஆ)

முதிருங்கருணை நேசா முறுசலிஞோர்விஷேசா
முஹம்மதே மெய்ஞானச் சேமா தெய்வீகச் சீமா (ஆ)

கதியில்லாப் பேதையன்றோ காப்பதும் பாரமன்றோ
கதம்பகஸ்தூரி மெய்நேமா தெய்வீகச்சீமா (ஆ)

கொற்றவனருள் வேதா குருமணிமகுடீதா
கோபமென் மீதெண்ணலாமா தெய்வீகச்சீமா (ஆ)

உற்றதுணை யிப்போது உம்மையல்லால் வேறேது
உகந்தெனை யாளாமற்போமா தெய்வீகச்சீமா (ஆ)

வந்தனம்பெறும் நீரே மகீதலம் புகழ்பீரே
மணங்கமிழ் மாமலர்த்தாமா தெய்வீகச்சீமா (ஆ)

சந்ததம் சேகுமதார் தாசன்பணிய சதா
தகும்பர மார்த்தமக்கோமா தெய்வீகச்சீமா (ஆ)

---

## விருத்தம்.

சாசுவத மாகவைங் காலதின பூஜித
ஜமாத்துசஞ் சாரமாகி
சாஹிநெறி பற்றிமென் மேலுமஞ் சலிசெய்
சதாநிஷ்டை யாரிபீன்கள்
வாசசற் சங்கமிசை வைகிமறை கேட்டந்த
வாக்கியப் படிதியானம்

மறவாதிருந்து தவ யோகஞ் செலுத்தாது
மாயைமெய் யென்றுவெளியேன்
காசினிதரும் கொடிய பந்தபா சச்சுழல்
காற்றில்கறங்கு மனதை
கட்டவகை தோன்று துழன்றுழன் றுருகிநீர்
கண்மலிய விம்மி வெம்பி
தூசகர் வசைக்கெளிமை யானகுறை நீங்கவித்
தொழும்பனெற் கருள்வதென்றே
துதிமாலை யுந்துசே குமதாரகந் திகழ்
சோபனநசூல் முஹம்மதே.

---

(கந்தா காருண்யனே)

இராகம்—இந்துஸ்தான் சேஞ்சுருட்டி தாளம்—ஆதி

பல்லவி.

தீனோர் புகழ்வாசரே திவ்யகுண போஷரே
வானோர் மகிழ்நேசரே மதின புரிராஜரே
மண்டலக் கொடுந் தீயவஞ் சகர்
மாயையால்மனம் வெம்பினேன்
அண்டர் நாயகன் தூத ராகிய
பாநபி யுமை நம்பி னேன்
அருள்கூர் மன மிலையா
ஆலம் இது நிலையா
பொருள்மா மறை தொலையா
புருக்கான் வேதா சொல்லையா

தந்தாள் பூம்பதமே ஜருதார் நபியிதமே
வந்தாள் உன்னதமே மஹா முதா நிதமே
கந்தமான் மத முந்து சோபனக்
காரணு கரு ணாகரா
சந்தம் சேகுமத் தார் சதா துதி
சர்வ ஜீவ தயா பரா
தாரார் புயத் திருவே
சதுர்மா மறைக் குருவே
சீரார் கமிழ் மருவே
தீன்கற் பகத் தருவே (தீ)

---

(பாலராமன் அய்யனே)

இராகம்—தோடி தாளம்—ஆதி.

பல்லவி.

வேறுகதியே தையா சதுர்
வேத முஹம்மதும் பாதந் துணையல்லால் (வே)

அநுபல்லவி.

கூறுமெய் ஞானக் குரான் உப தேசா
குரைஷி குலமணி யானப்ர காசா
சேறுமடல் மதி னாநகர் வாசா
செங்கோ லதிபதி யானவி சேஷா (வே)

நேசர்க் கருளும் பாதா இந்த
நேரமுகந் தென்னை யாளஒண் ணுதா (நே)

தேசமெங்கும் புருக் கானேவினேத் தோரே
ஜின்நகு லாவையும் தீனிலமைத் தோரே
காஷிம்குலமில் விளங்கத் தனேத் தோரே
காரணமா நல்லு தாரங்கினேத் தோரே (வே)

கோகநகப் பாதரே மக்கா
குரைஷிகுலக்கொழுந் தானவினே தரே (கோ)
ஆகமங் கட்கும் எட்டாதமெய்ப் போதா
ஆயிரநாமங் கொள் அகமது நாதா
சேகு மதார்க்கும் திருவருள் நீதா
தீன்தீன் முகம்மதே திகழ்மறை வேதா (வே

---

(நம்பிக்கை கொண்டெல்லோருங் கை)

இராகம்—இந்துஸ்தான் தேசிகம் தாளம் — அதி

பல்லவி.

சுப—சங்கற்பங் கொண்டென்னுளு மெய்
சரஹைப் பற்றுவோம்—சுப (ச)

அநுபல்லவி.

சரஹைப் பற்றுவோம் நம்
குருவை நத்துவோம் சுப (ச)

சாசனமென நமக் கோதும் பிர
தாப றசூல் மொழி மீதும்

சங்கதமன்றல் பொருந்த நலங்கொள்
சதுர்மறை தீனிலெப்போதும்—சுப (ச)

(தொகையரு.)

முன்னவன் வேதவசனங்களையுணர்ந்துநாம்
முரணாயிருக்கலாமா
முக்துநபியனுஷ்டான சன்மார்க்க சாஹில்நாம்
முல்ஹிதா யிருக்கலாமா
சன்னதங்கொண்டிந்த பிரபஞ்சவாழ்க்கையே
சதமென யிருக்கலாமா
சற்காரியங்களிலும் யிறையுதவி பேணாது
சமர்த்தா யிருக்கலாமா.

(பாட்டு)

| | |
|---|---|
| ஜகமுழு விகசித | சற்சித கற்பித |
| முதவிய முதல்வனை | பக்தியுவப்புர |
| சந்ததமுந்துதி | சேருமதார்தின |
| நம்பிவிளம்புகு | தாவருளாமன (சங்) |

---

(பாண்டியன் ஈன்ற மீனாட்சி)

இராகம்—அமீர்கல்யாணி தாளம்—ஆதி.

பல்லவி.

| | | |
|---|---|---|
| தீர்க்கம்ஜன் | மார்க்க | உபதேசா—மெஞ்ஞான |
| தீன்கலை | | வாசா |
| ஆர்க்கமன் | கீர்த்தி | மகராஜா—அத்வைத |
| அருங்கலை | | நேசா (தீர்க்கம்) |

(தொகையரு.)

கோடகமிலங்குவரல் மாடமதி ஞவின்செங்
கோலதிபரான கோவே
கூலநிகழ்சதுர்மறையி லோல புருக்கான்திகழ்
குருமணியெங் தேவதேவே

(பாட்டு.)

கொண்டலங் குரைஷி கவிகையதி குல பதியே—மக்காவின் நிதியே
தொண்டன்ஈ சுகிர்தக்கழல் டேறயிது தகியே—தந்தருள்வீர் கதியே (தீ)

(தொகையரு.)

சர்வகசுயாதீத ஆதியருள் சிம்மா
சனம்மீதி லங்குரூபா
சகலகலைவித்வப்ர சன்னவே தாந்தநீன்
சாசன நயப்ரதாபா

(பாட்டு.)

சாரசங் கீத தார்துதி தமிழ்ப் பாடும்—சேகும சூடும்
ஆரணப் பாணி அரங்கில் விதங்கூடும்—மாமஹாஷர் மன்ருடும் (தீ)

---

(வருத்துவதழகோ மன்னுமையல் மீறுதே.)

இராகம்—தன்யாசி தாளம்—ஆதி.

பல்லவி.

சகித்திடத் தரமோ என்னல் அப்துல் காஷிமே

சகித்திடத் தரமோ யென்னல்
என்னல் அப்துல் காஷிமே (ச)

அனுபல்லவி.

மிகத்திடக் கஞ்சம் விரிமலர்தஞ்சம்
வேண்டினேன் அரு ளாவிடில் நெஞ்சம் (ச)

பார்பணிபீர்முஸ்த பாவுலகதிலே
பாதுகாத்தருள் பாலிக்காவிடிலே (ச)

சூதர்கள் வலையும் சோரவபலையின்
சோபத்தால் வருந் தாபக்கம் பலையும் (ச)

சரண்மலர்க் கலமே தராததுற்பலமே
தாஷன்சேகும தாரென்சஞ்சலமே (ச)

---

(ஆசையுண்டாகத் தடையோ.)

இராகம்—மோஹனம் தாளம்—ஆதி.

பல்லவி

தேவை தந் தாள வருவீர்
செம்பொற்பா தாரம் (தே)

அநுபல்லவி

தேவைசேவைசெய திருவடி மாக்ஷி
தெரிசனமுதவிடில் எனக்குண்டோ தாக்ஷி
ஆவலுற்றது நிஜம் அதுமன சாக்ஷி
ஆதலினல்த்தா மரைப்பதக் காக்ஷி (தே)

சரணங்கள்

தேவாதி தேவர்க் கதியே-- தேசாதிபரும்
பூவரசர் போற்றும் பதியே-- புனிதமொழி

நாவால்ப்புகழின் துதியே-- நவிலுமிசை
பாவாணர்பாடும் நிதியே-- பாசுரத்யானம்

முத்திவிசால மருத்துவசாசனச் சீர்த்தி
முன்னூல் வேதாந்த
நத்தியபூஜிதர் கற்றகலாநிதிப் பூர்த்தி
நலங்கொள்போத
சத்தியதீன்வழி யுற்றுசதாமனக் கீர்த்தி
சந்ததம் போற்றி
நித்தியமாதவ பக்திசெய்பூரண நேர்த்தி
நிறைந் திலங்கும்
ஒருபரனருளிய திருமுகம்மது அவுதாரம்
உலகில் செய்து
வருநபிசெயல்புகல் தருசதுர்மறைப்பிர சாரம்
வகையறிந்து
குருமொழிவழுவற நெறியுறு பவனவிஸ்தாரம்
குன்று மெய்தீபச்
சுருதியில்குபிரெனு மிருளறவழிபெறு தீரம்
துவிதமின்றி
யொன்றென வறிந்திறையை வந்தனை புரிந்துவருந்
தொண்டர்களி லெந்தனையுங் கூட்டி
உகந்தென்னாளும்
மன்றுளும் விளங்கிநய முங்கிடுவி தந்துதிசெய்
தன்புற திடங்குவியச் சூட்டி
வழுக்கள்நீக்கி
நன்றுசரா ஹின்படிபுரிந்திக பரந்தரும
சங்கத ஜெயந்திகழப் பூட்டி
நயம்பாராட்டி

என்றமூல கந்திகழ்ப லன்பதம விந்துசுப
சந்ததிதூ லங்கநயம் நாட்டி
எழில்மருவும்

பானல் சேருமதார்பெற ஞாலம்
பரமசேவைசங் கீதவி சாலம்
ஞானசேமதி யாகியர் மூலம்
நவின்றுசெந்திருவுறை நாட்டவிக்ரலம் (தே)

---

(ஷண்முகா ஏழையென்மேல் தயவில்லையா.)

இராகம்—தேசிகதோடி தாளம்—ஏகம்.

பல்லவி.

செய்யதே மாமதிஞ ஜெய சிங்கமே
நீன் மறைவேதா மஹாமுதா அருள் திணைத்தங்கமே
சித்தங்குவிதா வநுதினம் பக்தன்துதியிடு குருநபி (ஜெ)

திருமாமறை வழுவாதொரு
கவிமாவுறை யுபதேசிக (ஜெ)

நீதனிபு லீசுடையச்
சூதகலப் போதமருள் (ஜெ)

சித்தக்குரைஷிகள் குலமணி
மக்கத்திறைதரு நயகுண (ஜெ)

அநுபல்லவி.

வையக வாசத்திலே கெட்டதனத் துட்டமன
வஞ்சநய பாசத்திலே

வக்கணைமொ ழிக்குரலி சைத்துகப டச்சரச
மனமறு அபிநய வனிதை தனவிலையிடுபாகணிகை
மையல்மதி மோசத்திலே

வண்டக்குண தன வஞ்சப்பா ராரிடுதீதற
தொண்டற் குதவிட சந்தப்பா சேகுமதார்தூதி
கொண்டற் குடையிடு செம்பொற்பா தாரஉதாரண (ஜெ)

---

## (முருகன் திருமால் மருகன் பெருமை.)

## இராகம்—அடாணு தாளம்—ரூபகம்.

### பல்லவி.

ததிவந் தருள்வீர் பெறவுங் கிருபை—மிகு
தக்கப் புகழ்வள மக்கமுஹம்மதே (த)

### அநுபல்லவி.

நதிதங்கிய மாமதிநுபுரி
நவகும்பர்கள் நிலவும்படி
யரசுந்திய விறசூல்நபி (த)

### (சரணங்கள்.)

ஆகாதாகாதஞ்சல் குத்திர வஞ்சக
அர்ப்பர்களின் வாசம்—துனி
யாலத்தில் கஞ்சினி துஷ்டிகள் பக்ஷம்
அதுவும் நமன் பாசம்

தேகாதிமண்டல மாமுக்ய வாழ் வென்று
சிந்திப்பது மோசம்—பூவில்
செம்பொற் பணிமணி வீண்சம்பத்துங் குண
சீலமில்லா நேசம்

யோகாநுசார முறை யுப தேசம்
உம்பர்கள் கோவுமக் கக்யசந் தோஷம்
வாகாரும்பக்தி ஜமாத்துகள் நேசம்

வளரும்படி தருணந்தெரி
சனை தந்திட விறசூல்நபி (த)

பொன்னிலர் போற்றுமெய் ஞானதெய்வீக
புருக்கான் மறைவேதா—ராஜ
பூபதிக்காஷிம் குலமணி தீபப்
புனிதமஹா மூதா

மன்னியலோகப்ர சித்தசுகுணஜன்
மார்க்கநெறி நீதா—பணி
மாலேவிண்மேடோதியல்ச் சேகுமதார்துதி
மன்றல்மலர்ப் பாதா

சொர்ன்னமவுலி தூலங்கனு கூலா
துஷ்டரை நிக்ரக சிஷ்டபரி பாலா
உன்னத சேமசம் பன்ன விசாலா

உபகாரண மதிணுபுரி
யரசாகிய விறசூல்நபி (த)

---

(செந்தூர் வேலாண்டி.)

இராகம்—கல்யாணி தாளம்—ரூபகம்.

பல்லவி.

குன்று வேதாந்தம் யார்க்கும்
கோதிலாது பாந்தம் தரும் (கு)

அநுபல்லவி.

குற்றமற்றுமிறை கற்பனைத்துமறை
செப்பநித்யநல சித்தசுத்தியருள் (கு)

குவிமனத்தவரும் உணரஹக்கனதி
பலஜிபத்துகளை நயமிகுக்கவருள் (கு)

கொண்டல் சூழ்கன மண்டலாதிபர்கள்
விண்டுநேர்பெற வுகந்தனுதியருள் (து)

குணமெய்ச் செயல்தகு புனிதத்தவநெறி
புரியத்திருவுயர் தருதற்பரனருள் (து)

மன்றூர்தி யானத்தீபம்
வைத்துஐங்கால க்ஷேபம்

வளமையில் மறைமொழி யறிநபிசரஹிலும்
துதிகொடை விரதமும் குருபதி தெரிசனம் (து)

சீர்பொழில் பாப்பநகர்
சேகுமதார்க்கும் நுகர்

திருநவமணிமதி கலைபுகழ்பிரணவ
பொருள்தருமிகபர மஹாஷரி லுதவிசெய் (து)

---

(மஞ்சுநிகர் குந்தளமின்னே)

இராகம்—பியாக் தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சந்தமலி யம்புயப் பாதா
அண்டர்கள் வாழ்த்த மண்டலர்போற்றும்
சாரமெய்க்கு ரான்மறைப் போதா—தீன்

சங்கதம்பெற வுந்தயாளக
நின்பதந்துணை சிந்துபாடவு

தாரணஞ்செய் தாளவொண்ணுதா
நம்பினயேழை வெப்புமிவ்வேளை
தாள்வகற்றி யாள்மஹாமூதா

பந்தபல வந்த பாசமே
நெஞ்சகமெத்த சஞ்சலமுற்ற

பாதகந் திரூப தேசமே—யருட்
பந்தனம்புரி வந்துசோபன
மங்களம்பொலி கந்தமேர்நபி
பக்ஷம் வைத்தே ரக்ஷிப்பீரையா
மனதுகந்த துதிசுகந்த
பாசுரக்கஸ்தூரிபூண் மெய்யா

தெள்ளுமறை விள்ளுந்தெய்வீகா
கானவன்நித்தம் தீன்வழிநத்த
சேடுறைமெய் ஞானவைபோகா—கீதச்
சேவைசந்தத முந்துசேகும
தாரகந்திக ழன்பியாசுப
சீருலாமக் காநசர்ப்பூமா
வந்தனைகூறும் என்கலிதீரும்
சித்திரச் சிங்காசனக் கோமா

(விருத்தம்.)

பங்கஜப்புனல் வளமை யறியாத பகடெனப்
பாழிலென் சிந்தை செல்லும்
பயனற்ற வினையறச் சந்தத மியம்பிடும்
பரிவிலாப் பேதை நானே
சங்கதமடைந்துமது திருவடிப் பூஜிதச்
சந்தான நயமுதவதீன்
சரஹினெறி குன்றுது யோக சன்மார்க்கமெய்ச்
சாசனமெனக் கருளுவீர்
மங்குலமடர்ந்தசோ லைத்தடப்பாரான்
வனந்திகழு மரபுநாட்டின்

மக்காநகர்குறைஷி குலதிலக செல்வமென
வந்தவதரித்த நபியே

துங்கவன வேடர்க்கும் உபகார தேவரீர்
துணையடியை நம்புகின்றேன்

துதிமாலை யுந்துசே குமதாரசந்திகழ்
சோபனற சூல்முஹம்மதே

—

(பண்டிதமோ திலால் நேரை)

இராகம்—இந்துஸ்தான் தாளம்—ஆதி.

பல்லவி.

சந்ததம் அன்பியா சேவை
சரஹில் நிர்ப்போமே (ச)

அநுபல்லவி.

சரஹில் நிர்ப் போமே—மனம்
தனிலும்வைப் போமே (ச)

கொந்தலர்மக் காவிசைந்த
கோமான் குலத்தில் வந்த
கந்தமுலாம் புனிததேகக் காரணநீதர்
காரணநீதர் பரி பூரணன்தூதர் (ச)

(தொகையறு)

கோகநக மன்னுமலர் வாவிமக்காநகர்
குறைஷிகுல் திலகமானோர்

மாகனக சிங்காச னப்பீடமன்னுதி மன்னரும்
வேதகுரு வள்ளலானோர்

சாகரமெனச் சூழ்ந்த மாயநதி கங்குலினைத்
தாண்டவொளிர் வங்கமானோர்

ஆகரமில் நம்மவர்க்கும் ஆதியிட மன்றூடுந்
தூயகுண அதிபரானோர்

(பாட்டு.)

மேப்பரிசின் தீன் மகிபர்
வேதபுருக்கான் அதிபர்
பாப்பநகர்ச் சேருமதார் பாசுரக்கீதர்
பாசுரக்கீதர் முஸ்த பாமஹ்மூதர் (ச)

---

(மகம்மதியர்குலத்தில் மாணிக்கமாவிளங்கும்.)

இராகம்—தேசிகதோடி தாளம்—ஆதி.

சந்ததம்புகழ் பரவும் கொந்தலர் மக்காவிசைந்த
தாஷ்மூல் அம்பியாகதியே சதாகொண்டாடும்
நேசர்க்கருளும் நிதியே
சதுர்மறை புருக்கான் சரஹின்விநோதா
குரைஷிகுலப்பதி யாமஹ்மூதா
சரணஞ் சரணஞ் சாற்றினேன் சஞ்சலந்தீர்க்க
தருணஞ் செம்பாதம் போற்றினேன்

கங்குலமுணர்த்தி யொளிர் திங்களை வரவழைத்த
கத்தன் அருளும் தூதரே வந்தனை செய்தின்
பக்தர்க்குதவும் பாதரே
கதிபெற உமதிரு சரண்மலரநுதினம்
பணிபுரியெளியனென் பிணியறு விகசித
கற்பூரவாயிதழ்க் கோமா கருணைசெய்வீர்
கஸ்தூரிமான் மதச்சீமா

கொண்டலங்கவிகை மக்கா மண்டலத்ததிபரேதீன்
குருமணியான வேந்தரே குன்றுதத்யாகப்

பரமசற்குண சாந்தரே
குவலயமீதுப காரவுதாரண
பதமலர்ப்பூஜித சேகுமதார்துதி
கொள்ளும் அம்புயத்தாளரே ஹக்கன் அருள்சேர்
வள்ளல் சந்தானத்தோளரே

(தாதாபாய் கௌரோஜி.)

இராக இந்துஸ்தான் தேசிகதோடி தாளம் ஆதி.

பல்லவி.

ஆதாரம் மஹமூதர்
ஆதாரம்
அஞ்சாதேயிரு நெஞ்சே மாநபி (ஆ)

அநுபல்லவி.

தூதாகிப் புவியில் வந்தோர்
சூதானக் குபிறை வென்றோர்
சோபனந்திகழ் விண்ணவரும் புகழ்
மான்மதங்கமிழ் அண்ணல் முஹம்மதர் (ஆ)

(தொகையறு.)

சுகுணமறை போதித்து திமிஸ்க்கிறைக் காகமுழு
சுடர்மதி யழைந்த பூமான்
மருஷரினிலும்மத்துகட் காக ஆதியிடம்.
மன்றுடும் நபிகள் கோமான்

(பாட்டு)

மஞ்சாரும் நீள்குடையோர்
மங்காத புகழுடையோர்

மாசறுங்குண முங்கிய வேதவி
லாசருங் கழல்ச் சந்ததமேகதி (ஆ)

(தொகையறு.)

காரார்ந்தகுபிரிருட் தேயமறைச் சுடரினல்
காசினி துலக்க லானோர்
பாராதியண்டபகி ரெண்ட மெலாங் தொழப்
பண்ணவர்க்கரச ரானோர்

(பாட்டு.)

பாலையினில்ப் புனலழைத்தோர்
பயஹாம்ப ராயுதித் தோர்
பாப்பனன்னகர் செந்தமிழ்ச் சேகும
தார்க்கும் இன்னருள் தந்திடும் மாநபி (ஆ)

---

(கொண்டிச்சிந்து இசை.)

இராகம்—இந்துஸ்தான் தேசிகம் தாளம்—ஆதி.

பல்லவி.

சதுர்மறைக் குரு நபியே—ஆதி
தாஷாமல் அன்பியாவென்னும் திருநபியே (ச)

அநுபல்லவி.

முதுநபிபெரும் ஒளியே—றசூல்
முறுஷலீன் ஆகிவந்தீர் நுதல்வழியே (ச)

நபிகள் நாயகமா வந்தீர்—ஜின்கள்
நகுலாவில்க் கலிமாவை நவிலவ றைந்தீர்
குபிரிருட்கு லங் கழைந்தீர்—திரு
குவைலிதிறைமருக ரென வுகந்தீர் (ச)

லாஞ்சனை வாகுவி லெய்தீர்—ஆதி
ரஹமத்யெனவே புருக் கான்மழைப் பெய்தீர்
வாஞ்சையிலான் கைகளைக் கொய்தீர்—பின்
வளரவொரு தசையினைப் பெண்ணுருச் செய்தீர் (ச)

நெறியுரு மிசுறுவைக் கண்டீர்—மிகு
நேயமன்னிட அவரிடும் விருந்துண்டீர்
வறிதில்லாச் சங்கதம் விண்டீர்—அந்தம்
மஹுஷரினில்மன்றாட ஆதிக்கங் கொண்டீர் (ச)

காவில்ப்புலை யழைத்தீர்—திமிஷ்க்
கபீபினுக்கம் புலியை வரவழைத்தீர்
பூவில்தீன் பயிர் விளைத்தீர்—மக்கா
புகல்குரைஷியின்குலம் தனில் தழைத்தீர் (ச)

வேதம்விரித்துப் புகன்றீர்—வண்
மிகுராஜுக்காதியிடம் மேவியே சென்றீர்
சூதர்கள் தீமையை வென்றீர்—செழும்
துடவைமானுக்குப்பிணை யாகவே நின்றீர் (ச)

மோடர்திருந்தக் கடுத்தீர்—வீசும்
மோதகங்கத்தூரியினைத் தூது விடுத்தீர்
வேடர்க்கருளைக் கொடுத்தீர்—வன
விலங்கினம் பேசபதில் உரை தொடுத்தீர் (ச)

குகையில் வஹிவரக் காத்தீர்—பெரும்
குஷ்டம்வியாதியொடு அந்தகர் தீர்த்தீர்
மிகையுழுமீன்களை யோர்த்தீர்—பதுர்
மேவியேஜாகிலை வென்று தீன்குலம் சேர்த்தீர் (ச)

வல்ல அரும்செயல் புரிவீர்—நிகழ்
வான்புவி யதிசய முழுதுந் தெரிவீர்

சொல்லுமென் மனதை யறிவீர்—பிழை
துன்பங்கள் நேரா மலதை வெல்ல வருவீர் (ச)

ஹிஜாத்தா யேகிவல் லையா—மதின
இருந்துபுவி முழுதும் ஆள்வில் லையா
ஹஜாத்தே ஆலம்நி லையா—பணி
யாகவிளங்கும் அருள்தாம லையா (ச)

இன்னும்பல காரணங் காட்டி—மிகு
இருளெனும் அந்தகாரக் குபிரினை யோட்டி
சன்னதமன் காபிரை வாட்டி— வேதம்
தளிர்தழைக்கவே செய்தீர் தீன் நிலைநாட்டி (ச)

பலன்தரும் அளி மயமே—முஸ்த
பாமுகம்மதுறசூல் நபி சுயமே
வலன்செய்ஞானே தயமே—பாப்பன்
மாநகர்ச் சேருமதார்க் கருள் நயமே (ச)

(காந்திரிஷி நம்மை காத்திடும் மகரிஷி)

இராகம்---இந்துஸ்தான்காப்பி தாளம்—ஆதி.

யாநபியே துணை
யாம் முகம்மது றசூல் (யா)

தீனதயாளபதி செய்கையினின் தத்துவமே
தேசிகரின் சற்குருஜி பாத்துகள் மகுத்துவமே
ஞானபுருக்கான்மறையின் ராஜிரின்தெய்வத்துவமே
நாஜூத் வடிவெனினும் லாஹூத்சமத்துவமே
ஞாபகமே செப்புவாய்
நாட்டிய தலீல் பலதும் ஞாபகமே

போஷகரே பரி
பூரண ரஹீம் அருளும் (போ)

பாஜிறுக் குபிறறவும் பாலித்தருள் வீர்நலமே
பரக்கத்துரும் மதுஹப் பாத்தினின் செயல்வலமே
வாஜிபெ னத்தொடர மாமதித ரும் பலமே
மஹபூ பேசரீ ஹத்தின் மார்க்கஇல் லாங் குலமே

வாழியவே அருள்
மங்களசோபன சுபம் வாழியவே

கவ்ம் பதியே தீன்
ஹபீபே மூமி னெவர்க்கும் கவ்ம்பதியே

லவ்கிகம் மஹஷரில் வா ஹிறும் அஜ்ஸாம் வயம்
நசுகியத்தறும்படி நன்னபிலிக்கா சுயம்
ஜெவ்ஹத் ஜாயிஸறலும் சேகுமதார்க்கருள் நயம்
ஜெகஜோதி யகமதரே சூல்லும் உமது மயம்

தீன்மணியே அருள்
செய்புமிறசூல் புருக்கான் தீன்மணியே

---

(பூவருந்திருவே)

இராகம்—புன்னுகவராளி தாளம்—ஆதி.

**பல்லவி.**

தூயர்சவ் கதமே —இற
சூலர்நின் பதமே —கதி.

சோபனங்கொள்மெய் ஞான தங்கனி
லாசருங்கண லங்கொள்சினேக (தூ)

தீயவஞ்சகமே —அற
நேயம் நெஞ்சகமே —பணி

சேவையுந்தமி யேனும்பண்பணர்
தினிலுந்துணை தந்தெனையாளும் (தூ)

(தொகையரு.)

கோலோச்சிநீன் பயிர்விளைத்து சர்வாலமொரு
குடையிலுற ஆளும்நாதா
பூலோக ரட்சகத் தேவரீர் திருவருள்
புரிந்தென்னை யாளொணுதா

(பாட்டு)

பூதியம் பெருமா சதுர்
பூதங்கள் சமமா நிகழ்
போதமன்றுளு மீகையம்பக
நீதிசந்தத முந்தவிலாச (தூ)

(தொகையரு.)

காமாதி மும்மல மகற்றி சன்மார்க்கநெறி
கற்பிக்கும் வேதரன்ரோ
பாமாலை களபகஸ்தூரியணி மார்பரே
பாதுகாப் பதுவுமென்ரோ

(பாட்டு.)

பாவணிந்துரைசே கும
தார்விளம்பரசே நறு
பாளிதங்கமிழ் கோவைசெங்கனி
வாய் மலர்ந்தசு பஞ்சொல் ஹபீபு (தூ)

---

(காமசுந்தராங்கி யுனது)

இராகம் தன்னியாசி தாளம்—ரூபகம்.

பல்லவி.

சீதசெம்ப தாம் புஜமலர்

சேவையான்ச தாசெய
திருவருளகம தாநய (சீ)

தித்திக்கும் தீன்கலி மாவரல்நய
பக்திக்கும் வித்தாகிட வருளியஜெய (சீ)

திருமதினு புரி யரசறைமாதவ
குரு நபிநாயக முகம்மது சோபித (சீ)

ஜெகமுழுவது மிலகிய பரிபூரண
மதிநிகரொளிவிடு விகசிதகாரண (சீ)

திடந்தருஞ்சீ ரார்பணியூர்ச்சித
பதப்ஜெகந்தோ • யாதிரு மாக்ஷிமை (சீ)

திருவுந்த பிறங்கலு லாவியுமெழு
விரிகொண்டல் விளங்கிடு நீள்குடைதரு (சீ)

அநுபல்லவி.

நீதசங்கீதவி சாலப்பாதா
நிர்க்குணனின்மல னிரஞ்சனன்தூதா
போதமெய்ஞானப் புகழ் மகுமூதா
போற்றுந்துதிமொழி மாதவர் கோனே
யேற்கும்பணிஜெய நபிபெரு மானே (சீ)

பாப்பமாநகர்ப் பதியின் வாசன்
பண்கிதத்துதி யாரிவி லாசன்
தூப்பாவுந் தெய்வப் பூஷிதர் நேசன்
தொண்டன் சந்தம் விண்டோதிய சேவடி
வந்தெதன்றென்றுந் தந்தாள் குருயாநபி (சீ)

## விருத்தம்.

ஏழுகத்தொரு விடரி லாஞ்சனை தரித்து மகிழ்
இகபர முவக்க விலையோ
இடர்மனக் காம்மாவின் காற்றழையல் நீக்கிநல்
ஈமான் புகட்ட விலையோ
தாழவுறுமந்தகா ரக்குபிறு நீங்கவே
சதுர்மறை துலக்கவிலையோ
ஜனனவழுவாய்வந்த அந்தகன் விலோசனத்
தாரை நயமாக்க விலையோ
வாழவொரு தசையினை திமிஷ்க்கிறை ஹபீபுக்கு
மங்கையுருவாக்க விலையோ
மாக்களும் மத்துகட் காதியிட்மிதுருஜில்
மன்றுடி மீழ்கவிலையோ
சூழமலமிக்கசுப சற்சிதம் விளம்புநெறி
தோயசெம்பாதம் அருள்வீர்
துதிமாலை யுந்துசே குமதாரகந்திகழ்
சோபனறசூல் முஹம்மதே.

---

(தசரத ராஜகுமாரா)

இராகம்—இந்துஸ்தான் பியாக் தாளம்—ஆதி.

### பல்லவி.

விகசித சோபனை வேதா இறை
தூதா நபிநாதா மஹா மோதா (வி)

### அநுபல்லவி.

சுகமதுரகமியல் தொண்டர்க்குதாரா
துரியவதீதயோக சுகிர்தகெம்பீரா

அகமதேமஹ்ஷரில் அருள்உபகாரா
ஆலவஞ் சத்தில்விட லாமா மறை
நேமா புனி கோமா நயபூமா (வி)

திமிஷ்க்கிறைக்கித் தசையைப் பாவையாய்ச் சமைத்தீர்
தேய்ந்த கலைபெருகச் சசிதனை யழைத்தீர்
சமத்துவமறைதீனை ஜகத்தினில் விளைத்தீர்
தஞ்சமென்றோர்க் கருள்வை போகா நல்வி
வேகா மெய்தெய் வீகா தவயோகா (வி)

மையல்மூ வாசைச்சண்ட மாருத வீச்சால்
வையகக்கபடகர் வசையுரைப் பேச்சால்
நையக்கசிந்தகனி லோசனக் கூச்சால்
நலியுமென்பிணிகளைத் தீருப் தயை
கூரும் எனைக்காரும் கதி தாரும் (வி)

நயபுவனசகிதம் நால்மறை சாற்றும்
நபிகள்திலகமேரே றுபிரிருள் மாற்றும்
ஜெயசற்ச னர்கள்பணி திருவடி போற்றும்
சேகு மதார்தண்டமிழ் தீபா மணி
மார்பா பிர தாபா குருரூபா (வி)

வெண்பா.

பணைமருவ மொய்ப்பாகம் பருவத்திரு வங்கம்
திணைமருவப் பொற்புந் திரளுங்கோன்—துணைமருவ
நாற்றிசையும் வேதமறை நபிநாயகங்கள்மேல்
போற்றியிசைப் பேன்திருப் புகழ்

(திருப்புகழ்ச் சந்தம்.)

(மருவே செறித்த குழலார்)

தனனா தனந்த தனனா தனந்த
தனனா தனந்த தனதான.

கதிரீடு கின்ற நறுமாசுகந்த
கபிபான சிங்க நபிமீது
கவிமாலை விண்டு பணியாய்விளம்ப
கருணாக ரங்பு ளிதமாக

விதிநாலு சங்க மறைதீனிலங்க
விடுதூதர் வந்து தனியாவில்
விவகார துங்க துரைராஜர்கண்டு
விரிதாள் பணிந்து திரையோடு

துதிநாவிளம்ப குபிரோர் திருந்தி
தொழுபோத நெஞ்சி லணியாக
தொடர்பூவி சும்பு முறதீனறைந்து
சுரர்வாழி யென்று நனிகூற

மதிநாமுளங்கு வரசா விளங்கி
வளராதி யந்த நபியான
மகுடமுதரந்த வறுசேறுசெம்பொன்
மலர்தாள்பணிந்து தொழுவாமே.

## வேறுசந்தம்.
## (வங்காரமார்பிலணி.)

தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன தனதான

பஞ்சார சாமளக லாபமயி லோதகைவி
சம்பாடு கோடுநுதல் கார்குழல்நி லாமுறுவல்
பண்டேரல் தேமதுர மாமொழிவி லோபுருவ—மிதழ்கோவை

பங்கேச மீடுகர மோகனக நேர்பொறிசு
ணங்கூறல் வானுடுச தாவிளைஞ ராடுதிரள்
பந்தார வாரணிப யோதரமெ ஞடவர்கள்—இணைகூறி

சஞ்சார காதகச லாபகுபு ருனமொழி
விண்டாட லாகமைய லூரவிளை கூர்நயன
சங்கார வேல்பொருது மால்வதன தேகவிலை—இடுமான

சங்கேத மாவசனி லோபகுண சூளைநறு
மஞ்சூஷை போகமுய லாதுசுப நேயமுற
சம்பூர ணுதரவு தாரநல மேயுதவி —புரிவீரை

மஞ்சாரு சீதளமை யாழிபுடை சூழலகில்
வென்றேற தீனின்விதை தூவிவிளை வாகவளர்
மங்காத ஞதிமுத லேவியரு ளாகவிடு—உயர்துதாய்

வண்சேனை சூழஜெய வீரமுடி வாளரசர்
சிங்காச ஞதிபதி யாகவொரு சீயமென
வண்டாடு சோலைதட வாவிபுனல் மாமதின—பரிபாலர

நெஞ்சார நீதிபிச காமலநு சாரவிதி
மன்றூர்கு ருன்மறைத போதனர்கள் சார்பனைய
நின்றூதி பூஜிததி யானமற வாமலுர—வெளியேனை

நிந்தாதி வாதபனு காதபடி பானலுற
பண்கித மாலைதுதி சிர்செய்கும தார்கருது
நின்பாத சிதமலர் சூடவரு ளாளகம --திறகுலே.

---

வேறு சந்தம்.

தந்தன தந்தன தந்தா தனனுத்
தந்தன தந்தன தந்தா தனனுத்
தந்தன தந்தன தந்தா தனனுத்—தனதான

கந்தசுயம்பெறு வந்தே றுடுகோச்
செங்கதி ரம்புலி மன்று டியலுக்
கம்புனை மங்குல்கு லந்தாரணி மேல்க்—குறைவான

கம்பலை வஞ்சக புன்சூர் விருதாக்
கொந்தலு நிந்தபெ றுங்கோ பமடாக்
கங்குல் களந்துறு வுங்கோளி வைதீய்க்—குபுர்தீர

சுந்தா மன்றனு மங்கா வொளிர்கூச்
சந்தெளி வுந்திர முஞ்சே தனனுர்த்
தொங்கலு கந்திட பண்சீர் துதிசாத்—துவிசாணே

தொண்டு புரிந்துமு கங்கூ றணியாய்த்
தஞ்சமி தென்றுப ரன்சேவை யினுல்த்
துன்பம கன்றுரு யஞ்சே மமுமாத்—தவயோக

பந்தன முண்டுபு லம்பீ தகமேற்
கொண்டு விருந்தமு ளந்தாய் சரஹால்ப்
பண்தவ சந்ததி யன்பா லுறநேர்த்—தியதாக

பண்டொரு வந்துணை கொண் டாதரவாய்த்

தண்டமிழ் சங்கிர்தம் விண்டோ தியநேர்ப்
பங்கய செஞ்சர ணங்கால் சமயோர்ச்—சிதமாக

சந்தன குங்கும செந்தா ழைமராச்
செண்பக கொங்கொடு மந்தா ரையுலாத்
தண்டலே யும்பழ னங்காநதி சூழ்க்—தெளிவாக
சங்கதம் விண்டுரை குன்று தெழில்பாப்
பன்புரியின் சிறுவன் சேகுமதார்ச்
சந்ததமும்பெற தந்தா ளருள்காப்—பிறசூலே.

---

வேறு சந்தம்.

(இசைந்த சூலங் கரியுறி)

தனந்த தானந் தானன தானன தனதானா.

குடம்பை வாழுஞ் சீவர் வஜீபன முறநேரே
குணந்த யாளன் தோழமையாகிய மகுமூதா

மடங்கலீறின் கோளர்கள் சூழெனை யணுகாதே
மறங்க பாடந் தீகுபி ரோருட னயவாதே

படர்ந்த வேதம் பேசியதாய்நெறி தவறாதே
பயின்றுதீனின் போதமளாவிட இதுகாலே

தொடர்ந்தெனுளஞ் சேகுமதார்பெற அருள்வீரே
சுகந்தம் வீசுந் தீனதயாபதி இறசூலே.

---

வேறுசந்தம்.

தாத்த தானன தானன தானன
தாத்த தானன தானன தானன
தாத்த தானன தானன தானன—தனதான.

தேப்பருதநி ஜாபதி பூரண
மீட்டுமீயுரை நாள்பல வாய்தனு
தேற்றுனூதன வாழ்வென வேவளர் —துனியாவில்

தேட்டிதாமென கோதுறுதீவழி
நாட்டமாய்நிதி காண உபாயமல்
சேர்த்து சூதவி லோசன மாலினில் —மயல்மீற

பூப்பளாவிய மானினி தோதக
ஊக்கமூளப யோதா தூசினை
போர்த்துமீளசை யோகவி காரமெய் —குறிகான

பூர்த்தியாவச மாகிசதாவினை
யாட்டிலேயிரு காமியர் போம்வழி
போக்கிலேழை செலாது குதாவுரை —நெறிநீத

கோப்பபார குரான்விதி பூஜித
நாப்பணேசைதி யானமனுலய
கூற்றுநீதிகெ டாதுப யோகசு —குணநேய

கோட்டிலே வளர்தூய்கலை நேர்மன
வேட்டிலார்தவ யோகசுபாகம
கோஷ்டம் வாய்மை தியாகசர் வாதியு —நயமாக

காப்பருத தயாள றஹீம்மொழி
யேற்கையாகிட லோகமெலாம்விரி
காத்திம் யாமஹா மூது ஹபீபென —புகழ்காலே

காகூதிசூழ்தட நீள்புன லூர்வயல்
பாப்ப மாநகர் சேகும தார்பெற
காக்கும் ஆர்வல மீகைவி டாதருள் —இறசூலே

## வேறுசந்தம்.

தானனதாத்தந் தாத்தந் தனதன
தானனதாத்தந் தாத்தந் தனதன
தானனதாத்தந் தாத்தந் தனதன — தனதான

காதகர்தூர்த்தம் பேப்புன் கயவர்கள்
நீதமிலார்ச்சங் காத்தங் குணவழு
காளமைமூர்க்கம் பேச்சின் துறுமதி — குபுருன

காரடர்கூட்டஞ் சூர்க்கம் பலமறு
பாவம்விடாத்திண் டாட்டந் தயவறு
காசினி தூற்றுங் கீழ்ச்சண் டிழிவசை — பிழைதீது

சூதடம்வேப்பங் காய்க்குந் தகுமென
வீறிரு மாப்பும் பீத்தும் பலபல
தோதக வாட்டந் தீட்டின் கொடியரை — யணுகாமல்

தோழரெதேஸ்டம் போர்ச்சிங் கமதென
பீசபிலூக்கந் தோற்றுந் தயவுள
தூயர்சிலேஸ்டம் பாக்கந் திகழ்மறை — துதியோர்கள்

போதமுலாச் செங்கோல்ச் சந்ததமுர
தீனிசுலாத்தின் பாக்யம் பெறுகிடு
பூரணநோக்கின் கூச்சந் தெளிபொறை — குணவாய்மை

போஷகநாட்டஞ் சேட்டின் திருமலி
யாரண மார்க்கம் பால்ச்சென் றிடுமன
பூஜித யாப்புந் தோய்ப்பண் டிதகுண — மிகவக

மாதவ மூட்டுந் தீர்க்கங் குருமொழி
கோதறு வாக்கும் போற்றுந் துதிமற
வாமலெ தார்த்தங் காட்டுந் தயமுள — ரினிதாக

மாதிரு வாக்கும் பாப்பன் புரிவளர்
சேகும தார்க்குங் காப்பின் கிருபைசெய்
வாசனை யார்க்கும் பூத்தம் பதமருள் —இறகுலே

---

(குமாரனையே பாடி)

இராகம்—இந்துஸ்தான் பியாக் தாளம்—ஆதி.

பல்லவி.

அனுதிபராபரன் அருள்மஹாமூதா (அ)

அநுபல்லவி.

வினுமொழி மலக்குகள் விளம்பிடிற் புரிந்து
விடைபகர வறியேன் அடுமையான் தெரிந்து (அ)

(தொகையரு.)

இகபரமும் சர்வ ஜீவகாருண்யமா
யிலங்கியன் றுடுதிருவே
ஜெகமிதிலு மெளியெனென் கம்பலையகற்றிநற்
சித்தியருள் ஞான குருவே

(பாட்டு.)

முகம்மதே முஸ்தபாவே முச்சுடர்வியாபகரே
உகந்து சேகுமதார்க்கும் உதவிசெய் தாயகரே (அ)

---

(சஞ்சலமா நெஞ்சமிக உடைந்தேனே.)

இராகம்—பங்களா தாளம்—ஆதி.

பல்லவி

சொன்னதையெல்லா மறந்துவிடலாமா—இந்த
தொல்லுலக மூவாசைகுட் படலாமா (சொ)

அநுபல்லவி.

நன்னயம்பெற நமக்கே அண்ணல் மஹா—மூதர் (சொ)

நாடகர்பாதஞ்செய் நளினம் போலே விலை
நாரியர் மனையுபாயா சனம் போலே
தாடமைக் குறளிவித்தை தனம் போலே நாம்
தூங்கையிலே கண்டிடுசொற் பனம் போலே

தோன்று வெயிற் கானல் ஜலம்
போன்ற புவி யாசையற
வேண்டுமென வேதநெறி
தேர்ந்துணர்ந்து பெரியோர் (சொ)

பாதகத் தொழில் முறையைப் பழகாதே பெரும்
பாதகக்குழிற் நரகில் விழகாதே
வேதநெறியைக் கடந்து விலகாதே தவ
மேன்மைசாது சங்கம்விட்டு நழுகாதே என
விண்டிசைத் தடிக்கடிசொற் கொண்டுணர்த்தி நமக்கென
அண்டருக்கண்டர்நபிசொல் கண்டறிந்து பெரியோர் (சொ

காட்டினில் ப்பிரகாசித்த மதிபோலே கனை
கார்கடல்தனிற் பொழிந்த மழைபோலே
நாட்டினுக் கரசில்லாத குடிபோலே பக்தி
ஞானமில்லா யோகியர்கள் தவம்போலே இந்த
நானிலத்தினுங் கிரியை வீணிழைக்கும் தன்மையற
தீனகத் திலுங்குவிய வேணுமுக்யந்தநீயெனச் (சொ)

பாப்பநகர்ச் சேகுமதார் பதம்பாடி சொல்லும்
பக்குவத்திலும் புண்ணியத் தவந்தேடி

மாப்புகழ்த் துதிகொளும் ரஹீமைநாடி பணி
வாழ்த்தி வாழ்த்திக் கெஞ்சிக் கெஞ்சியேமன்றாடி இந்த
வஞ்சகக்கபடப்பிர பஞ்சமுக்ய மெனக்கொளும்
நெஞ்சகத் துறவைத்தொடை யென்றுடைய ஹாம்பர் (சொ)

---

(முத்துக்குமாரையனே.)

இராகம்—சங்கராபரணம் தாளம்—ஆதி.

பல்லவி.

சித்தம் நிலைப்போதமே—யருள்
திவ்யசெம் பொற்பாதமே (சி)

அநுபல்லவி.

உத்தமர்க்குச்சுப சிட்டமெய்ப்பொலிய
உறுதிதந்த மாட்சி மெஞ்ஞானப்
பரிதியுந்து காட்சி ஆழ்ச்சி (சி)

வஞ்சமாதர்மையல்ச் சண்டமாறுதமுன்
வந்து வந்து மோதி நாலினுமென்
நெஞ்சதீபமது குன்றிடாதுகுணம்
நேர்த்தியாம் ப்ரீதி பெறமனது
பூர்த்தியாகும் நீதி ஜோதி (சி)

தீட்சை தீனுமர சாக்ஷிநீடியம
தீனதேய சார்பா நெடியமனத்
தாட்சிதீரசுப மோட்ச வீடருள்சங்
தானமார மார்பா துதியணியும்
ஞானசில தீபா பூபா (சி)

தருமசிலகுண முறுசலீன்களினும்
தாஷலன்பியாவே பன்னுளினுமென்
சிறுமையானமன தொருமை யாகவுப

தேசமுஸ்த பாவே செய்வீர்ஜெய
போஷகப்ர பூவே கோவே (சி)

கொண்டலங் குடைசொ ரிந்திலங்குசுபங்
கூறுகீர்த்தி நூலா சதாபுகழ்த்
தண்டமிழ் மொழியின் சந்ததஞ் செய்கும
தாருபோற்று மூலா தந்தாட்சர
ஞாமார்க்கு மேலா சீலா (சி)

---

(வடிவேலா சிவன்பாலனே)

(இராகம்—இந்துஸ்தான் கவாய் தாளம்—ஆதி.

பல்லவி.

இனி—ஆதாரம் யாரையா யாறசூலே—யினி (ஆ)

அநுபல்லவி.

மாதாபிதாவினும் மன்னுந் தியாகா
வள்ளல்முஹம்மதே மகிமைவை போகா —இனி (ஆ)

செய்பவந்தீர தீன்கரைசார
செய்யது றசூலரே தீயன் ஈடேற இனி (ஆ)

ஈகை தீனவர்க்கும் ஏழை யென்றனக்கும்
இறையிடம் மன்றாட இகபரந்தனக்கும் யினி (ஆ)

சந்ததம் சேகுமதார் துதிமலர்ப் பாதா
சதுர்மறை தாஷூலன்பி யாமஹமூதா யினி (ஆ)

---

(ஞானபண்டித மோதிலால்.)

இராகம்—இந்துஸ்தான் பியாக் தாளம்—ஆதி.

பல்லவி.

வேணும் கிருபை நபியே—உதவிசெய்ய (வே)

அநுபல்லவி

தானுவுந்துணையே சரண்கழலிணையே
சய்ப்ரசற் சாரத்திணையே உதவிசெய்ய (வே)

(தொகையறு.)

பாவாணரின்துதி வடம்புனையுமார்பரே
பயஹரம்ப ரானபோதா
பாராதிமறுமைக்கும் சுடர்மறைத் தீபமாம்
பவனவிஸ்தார நீதா
தேவாதி தேவரீர் திருவுளமிறங்கியென்
தீவினையகற் றெருதா
சித்தங்குவிந்திடற் கிகைப் பதந்தரும்
தேசிகமெஞ்ஞான நாதா

(பாட்டு)

ஜெயசுப குணபோதம் சேகுமதார் சங்கீதம்
சேவைதி யானஞ்செய் பாதம்—உதவிசெய்ய (வே)

(அந்த மிகுந்த முகுந்தன் மருகோனே.)
(இராகம்—பாரீஸ் டான்ஸ் தாளம்—ஆதி.)
பல்லவி.

திங்கள்மு கந்தகை கொண்டமு ஹம்மதர்
தீன் தீன்—மெய்—தீன் தீன்—மிகு
தேவை சந்ததம் சேவையுந்திட ஓவியம் பறை
வீண் வீண்—பொய்—வீண் வீண் (தி)

(தொகையறு.)

காவளமிகுந்த மதி ஞபுரிவிளங்குமதி
காரணபி வேத விதியே
பாவமுழுதுங்கறிய கோயிகவி மோக்ஷனப்
பதவியுற வாக்கு நிதியே

(பாட்டு.)

பாப்பமாநகர் வாழ்க்கைசேரும
தார்க்குதாரண ஆக்கமாதிணை
நேர் நேர் நேர் (மிகு) (தி)

—

வெண்பா.

மதியால் வழுவகல்சன் மார்க்கமாம் வேதநெறித்
துதியால் பலமகற்றுந் தூயபணித் —திதியால்
விற்பனர்க்கும் நன்னீத விறலோர்க்கு மின்னிசையென்
கற்பனைக்கு மோரஹீம் காப்பு

இன்னிசை.

கானல்க் கமலமென காசினியிலெள கீகமருள்
மான லகற்றிச் சதம் வற்சரம்பதம் வைதிகம்
தேனல்ச் சுவை தண்டமிழ்ச் சேருமதார்க்குதவும்
பானல்வளமை மக்கா பயஹாம்பர் நன்னபியே

பாரார்து ரோணர்களின் பகழிச்சமரும் பதுரில்
காரார் குபிறைவென்று கதிமறைதீன் செய்தோமோ
சீரார்திணை மருவச் செய்தருளவேண்டுமையா
பாரா யருள்புநக்கான் பயஹாம்பர் நன்னபியே

திரத்தின் களிறெனவே திண்புயத்து வேந்தர்மக்கா
புரத்தின் குறைஷிகுல புண்ணியராப் துல்லாசெய்
வரத்தின் பயன்திருவா வந்துலகினுந் துணையாய்
பரத்தின் சபைக்குதம் பயஹாம்பர் நன்னபியே

ஏகார்ந்த மட்கலத்தை நுகைவுபடத் தொட்டுறுத்தும்
நகார்ந்த நக்சுரக நக்கையர்க் காளாகாமல்
சேகார்ந்த கேசரம்போல்ச் சித்தமுற வெற்றியருள்
பாகார்ந்தவின் சொல்மறை பயஹாம்பர் நன்னபியே

மட்டார்மலர் விழிபொன் மவுலிபுனை மத்தகம்வெண்
கட்டார் முறுவல்தமிழ் கற்பூரச் செந்துவர்வாய்
வட்டார்நன் முத்திரையும் மடல்ப்பதத் தின்காட்சியருள்
பட்டார்பொலி வின்மக்கா பயஹாம்பர் நன்னபியே.

சேடுடைய வெற்றிச் சிலைபுருவத் தாரையம்பு
ஈடுடைய சூளையர்மால் யெஞ்சியுழல் வேனே
கோடுடைய குஞ்சரந்திண் கொண்டுலவத் தண்டலைமேம்
பாடுடைய மக்கா பயஹாம்பர் நன்னபியே.

ராசிமலி யனைய நரலையலை கொழித்து
வீசிமுளங் குலகின் மேன்மயக்கங் கொள்ளாமல்
தோசியிபு லீசுடைய சூதகக்கபடவலை
பாசியை யகற்றியருள் பயஹாம்பர் நன்னபியே.

மீதாக்கில்முன்னமேசாம் விண்டுமறந் ததுவை
யாதாக்க வேபுவியில் ஆதிரஹமா னருளும்
தூதாகி வந்துலகில் துணைபுரியும் வேதாந்தப்
பாதாரந் தந்தருளும் பயஹாம்பர் நன்னபியே.

*நந்தியவர்த் தம்பாலாம் நல்வியப்பா தன்பொறிகை
சந்திகள் ளுணர்வாசு தரிசன நெறிபுருக்கான்
முந்தியுறை காணம் முற்றுநயம் பொலியும்
பந்தியுறை விஜயப் பயஹாம்பர் நன்னபியே.

மண்டும்வரி மடந்தை வாரமை யலிதயங்
கொண்டுசெறுக் கணியுங் குருவிடங் கச்சோணமுலா
விண்டுகுடை நிழற்ற மெய்யார் புனலிடமில்
பண்டுமறை மொழியும் பயஹாம்பர் நன்னபியே.

அச்சந்தொடுக் கும்வல்லி யங்கே சரிகயமா
மச்சம் பொலிதடங்கா வளமதினு க்கோலரசே

உச்சங் கழைந்தநப முறழ்வுகளம் பயக்க
பச்சப்வைத் தாளுமையா பயஹாம்பர் நன்னபியே.

திண்ணைக் குவட்டின்மலை தெண்டிரைசூழ்ப் பூமாயை
கண்ணைக் கவர்ந்திடுமால் காமுகதூர்க் காட்சியென்னும்
மண்ணை நுகரா மதியருளவேண் டுமையா
பண்ணை நிலயமக்கா பயஹாம்பர் நன்னபியே.

நீபம் நயம்பொலிய நிலவிச் சதுர்மறையின்
தீபம் துலங்கவெழில் ஜெகமுழுது மைங்கால
க்ஷேபம் புரிந்துவரச் செய்தசற் குருவேயென்
பாபம்பொருத் தருளும் பயஹாம்பர் நன்னபியே.

பூராய வேதமிப் புவிமுழுதும் விண்டுநல
மாராயங் கொண்டவெழில் மதிஞபுர வாழ்வே
சீரா யமலம் திகழவரமருளும்
பாராயருள் புருக்கான் பயஹாம்பர் நன்னபியே.

துத்தியாவம் நிகர் சோரர்கய ஹறகற்றி
நித்தியப்பணி சொலின்செய் நிலயகதி ஞானமன்னல்
சத்தியமுறைச் சாகை தகைத்தல் தயைநெறியாய்
பத்தியருளு மையா பயஹாம்பர் நன்னபியே.

தார்நிலவு மைச்சுரியல் தாளவட மிலங்கி
வார்நிலவு கொம்மையில் வனிதையர்க்கா ளாவேனே
கார்நிலவு பேரிருளில் ஹபீபினுக்கம் புலியை
பார்நிலவத் தானழைத்த பயஹாம்பர் நன்னபியே.

குத்திரங்கொள் நெஞ்சம் கொடுந்தொழில வாலாய
மத்திரங்கொ ளுஞ்சந்தத மதியுடையே னைனும்
வித்திரஞ்செய் யாதுசரண் மேவவருள் தீன்வேத
பத்திரங்கொள் மெஞ்ஞான பயஹாம்பர் நன்னபியே.

இந்தன மூலாமதினத் தியல்புரச் செங்கோல்பாவி
வந்தன மணிபுருக்கான் மாமறைதீன் விண்டோரே
உந்தனருஞ் சேவையில்நான் உபசமனங் கொண்டிருக்க
பந்தனஞ்செய் தாளுமையா பயஹாம்பர் நன்னபியே.

துங்கமதி முகங்கத் தூரியணீ மொய்ம்பாகம்
அங்கத் திணையெழிலும் அடிமையென்று காண்பேனோ
வங்கத் திருக்கருணை வள்ளலென வந்துதித்த
பங்கயத் தடத்துயக்கா பயஹாம்பர் நன்னபியே.

பின்னம்பரு வணிகை பிழைநோய் களையகற்றி
அன்னம்பகர்ந் தளிக்கும் அறிவருள வேண்டுமையா
சொன்னம் பொலித்தரளஞ் சொரிமெளலி மத்தகசம்
பன்னம் பலன்மருவும் பயஹாம்பர் நன்னபியே.

துட்டங் கபடமறு துருமார்க்க வூழைகொடும்
சட்டந் தவிற்குந் தருமநெறி விண்டோரே
சிட்டன் துயரகற்றித் திருமதியருள்வேந்த
பட்டம் பொலியுமக்கா பயஹாம்பர் நன்னபியே.

சாமார்த் திடுங்கனிபோல் கண்கண்ட காரணங்கள்
திரமார்த் திடப்புரிந்த திரல்விஜயத் தேசிகரே
உரமார்த் திடக்கருணை யுத்தண்ட மீகையருள்
பரமார்த் திகம்விளங்கும் பயஹாம்பர் நன்னபியே.

எட்டின் மணமதுவு மினிதுவறிக் துண்டுவளி
நாட்டின் பொழில்மருவும் நருமதினுக் கோலரசே
கோட்டின் சுடர்விடங்கம் கொண்டுவளர் தூய்முகமும்
பாட்டின் துதியணியும் பயஹாம்பர் நன்னபியே.

ஆலித்த கொங்கை யடர்கணிகை நச்சுறவின்
காலித் தனவீணர் கைகோத் துழலாமல்

மோலித் தனத்தோர்க்கு முற்பதியே நற்கருணை
பாலித் தருளுமையா பயஹாம்பர் நன்னபியே.

---

## ஷெய்கு அப்துல்காதிறு முஹ்யதீன் ஜெயிலானி ஆண்டவர் அவர்கள் மீது.

### விருத்தம்.

சுவனவொளி நிலவுமெய்ப் பூரணத் தீபமாந்
துரியபுருக் கான்திலகமே
தூயபூவ ம்பர வதீதமெஞ் ஞானமாஞ்
சோபிதப் போதநிதியே
தவளமதி நிகர்வதன கெம்பீர தேவரீர்
தவமகிமை சாற்றவெளிதோ
சரஹிலொரு நெறியேனுஞ் சாதிக்க வியலாத
தமியனெற் கருளில்லையோ
புவனமிசை சிட்டருக் காசாரப் போஷகப்
புரவலத் தஸ்தஹீரே
புகழாளர் நின்கருணை பாலிப்பதெந் தநாள்
புன்மையேனுய் யும்வண்ணம்
குவலயந் தன்னிலென் சஞ்சலந் தீர்த்தருள்
குதுபுகட் கரசரேசற்
குணமருவு பதமினிய துதிசெய்கும தார்புகழும்
குருமணி முஹ்யதீனே.

(இந்த உடம்பைநம்பி யிருக்கலாமா)

இராகம்—இந்துஸ்தான் தோடி                    தாளம்—ஆதி.

கண்ணிகள்.

தஸ்தஹீர் குதுபெங்கள்      தாயகமே
தரணி புகழ்ஒலிகள்      நாயகமே

முஸ்தபா நபிபேரர்      முஹ்யதீனே
முடிபுனை யரசர்க்கும்      அரசர்கோனே

துஷ்டநிக் ரகசிஷ்ட      பரி பாலரே
தூயதிரு புருக்கான்      செங் கோலரே

மறுமைக்குதவ அருள்      கழலிணையே
வறுமைப் பிணியகற்ற      வருந் துணையே

லௌகீகப் புவியின்பம்      நாஸ்திகமே
லாஹூத்மெய் ஞானமென்றும்      ஆஸ்திகமே

குரைஷிகுலந் திலக்கும்      கோத் திரமே
குதுபொலி விகசித      நேத் திரமே

ஜருதார் பாதுஷாவான      சற் குருவே
தனியோ னருள்மருவும்      மெய்த் திருவே

திருமலித் தண்டமிழின்      பாவ ணியே
சேகுமதார்க் கருள்      தீன் மணியே

---

திரு நாகூர்

## ஷாஹுல் ஹமீது ஆண்டவர்கள் மீது

விருத்தம்.

அக்கனருள் பெற்றவொரு முத்தொளிவு ஆலத்தில்
ஆதியந் தத்தி னபியா

அவதரித்தருமறை யறைந்தசற் குருகுலத்
தாகிநிகழந்தமணியாய்
சக்கரநன் னெறிநின்று பாலிக்கு மிறைவர்க்குத்
தனிமகுட நீதிமணியாய்
ஜகநிகழும் மாந்தர்க்கு யிறையுணர் வுதிக்கவுறு
சரஹிலுறு துங்கமணியாய்
பக்கசரமணிகொடி துலங்கவேயிருளறப்
பரிதிவாய்ந் தொளிருமணியாய்
பக்குவங் கொள்ளமெய்ப் போதர்க்கு வேதாந்தப்
பணர்விரிமெஞ் ஞானமணியாய்
மக்கநகர் முகம்மது றசூல் நபியின்தீன் சறஹைற
வாழ்விக்கு மெங்கள் குருவே
வாசகத் துதிமாலை பணிசெய்கு மதார்க்கருளும்
மதிஷாஹுல் ஹமீதாசரே.

---

(ஐயா பழனிமலை வேலா.)

இராகம்:— சஹாணு தாளம்—ஆதி.

பல்லவி.

கருணைவரமருளும் நாதா—அப்துல்
காதிறே ஷாஹுல் ஹமீதா (க)

அநுபல்லவி.

குருசற்சிதம்புகழ்வி னோதா—தீன்
குரைஷிகுலத் தினரும் போதா (க)

நானிலந்துதியதி பதியே—நபி
நாயகர் பேரச்சந் ததியே

பூமிகர்த் திருப்பதம் கதியே—யருள்
புரியொலி நாயக நிதியே (க)

(தொகையறு.)

ஆனந்தருமறை யகண்டபரிபூரணு
நாதியருள் பெற்றவணியே
அடிமையென் தூயரகல மெய்த்தீன் கடாக்ஷம்வைத்
தருள்புரி தெய்வீக மணியே

(பாட்டு.)

அல்லும் பகலினுமென் னேரம் துனி
யாலப் பலவகைவி சாரம்
தொல்லையகற்றி ஜெப தீரம் பெற
துணைபுரிவீ ரூப காரம் (க)

வஞ்சற் கிணங்கியுழ லாது பர
னிதையர்க் கடிமை புகாது
நெஞ்சில் கொடுமைநினை யாது நன்
நெறிமுறை மலியவிப் போது (க)

(விருத்தம்.)

விடந்திகழ்ப் பரத்தையாசை மேதினிக் கொடியதீமை
அடம்புனை யிருண்டநெஞ்சர்க் கடுமையாகாதுமீழ்க
கடன்முர சறைபுநாகூர் காரணஒலி யாய்வந்த
தடம்புயக் காதிர்மீரான் சாகிபே கமலப்பாதம்

(பாட்டு.)

தந்தாட் கிருபைநலந் தேக்கி கெட்ட
ஜாஹில் குணங்களற நீக்கி
முந்தான மறுவினைப் போக்கி முழு
முதலவன் தொழும்பினி லாக்கி (க)

(விருத்தம்)

சருவகப்படைப்பை யெல்லாம் சமைத்தளித் தளித்
தெவைக்கும்
மருளற நீதிஞான மார்க்கமும் வகுத்தவல்லோன்
அருள்மறை தனைப்பூவானம் அடங்கலும் பரப்பியோங்கும்
திருமலி நபிகள்கோமான் தீன்மறை யுறுதியென்றே

(பாட்டு)

ஜெயங்கொள் ஈமானெஞ்சி லடுக்க நனி
தீன்மறை யருள்வெற்றி கொடுக்க
நயங்கலி மாப்பொரு ளெடுக்க கல்பும்
நாவுந்திக் கிர்மொழி தொடுக்க (க)

(தொகையறா.)

பொன்னுலக நயமறுப் பானமூவா சையாற்
புத்திசென் றேங்கிடாமல்
மன்னுபல கொடியசைத் தான்களிடு தீதான
வலையினிற் சோர்ந்திடாமல்

(பாட்டு.)

வாகுயர் சரஹினிற் கூடி நல்
வழிபெற மதுகரிபை நாடி
சேகுமதார் தினம் நீடி துதி
செய்கயிறை யிடமன் றூடி (க)

---

(இப்புவியி னுலமாக்களே)

இராகம்—நாதநாமகிரியை தாளம்—ஆதி

(பல்லவி.)

வேத நெறியை யடுப்போம்—தினமுமைந்து
வேளைத் தொழுகை யெடுப்போம்

அநுபல்லவி.

சீதமுகில் பழனஞ் செறியுமக்கா புரத்தின்
தேசிகர் பயின்றுவந்த மாசில்லாத சரீஹத்தின் (வே)

(சரணங்கள்.)

எல்லா வல்லமையுள்ள அல்லா வொருவனென்றும்
இமயவரும் வேதங்கள் யிறசூலர்கள் மெய்யென்றும்
வல்லார்கியாமத்தின்பின் மஹஷர்நாளும்உண்டென்றும்
மௌகிபில் நன்மைதீமை வல்லோனின் வசமென்றும் (வே)

காத்திமநபி சரஹின் கலிமாவுறை தெரிந்து
கத்தனே நின்முமைந்து வக்திலும் தொழுதறிந்து
பாத்தியர் ஏழைகட்கும் பகர்ச்சக் காத்தும் சொரிந்து
பக்தியுடன் நோன்புவைத்து ஹஜ்ஜையுமேன்றுல்ப்புரிந்து (வே)

ஏவல் விலக்கல்களை யினிதா யறிந்துகண்டு
யிறையோன்தொழுகைதனில் அதபாகவே துவண்டு
காவல்உற ரஹீமைக் கருத்திலுவந்து கொண்டு
கல்பும் செயலுமொக்க நாவால்த்துதி கள்விண்டு (வே)

இறையோன்தொழுகைவிட்டால் ஈமான்வரிசையென்ன
இஸ்லாம் தரித்திப்பில்லா திருந்திடில்ப் பயனென்ன
மறைநீதி கடந்திடில் மநுஷீகத் தன்மையென்ன
வானோர்புகழ் ஹபீபு வள்ளல் நமக்குச் சொன்ன (வே)

தாஷல்அன்பியாநெறி ஷரஹம்வெற்றிகொடுக்க
தரங்கெட்டலஹினத்தும் ஜஹன்னம்வோட்டமெடுக்க
மாசில்லாப்புகழ்பெறும் வல்லோன்அருள்தொடுக்க
மகிமைச்சுபமங்கள பிரதவுஸ்ஸையடுக்க (வே)

நருமலர்ப் புவியெங்கும் நனிவுறமிகைத் தோன்
நயம்பெற வடியர்க்கு சுபமறை விதித்தான்

திருவருட் பாப்பநகர் சேருமதார் துதித்தீன்
தேசமெங் கும்புகழ்சன் மார்க்கத்தின் புருக்கான் (வே)

---

(ஆனந்தக் களிப்பு)

இராகம்—நாதநாமகிரியை தாளம்—ஆதி.

பல்லவி.

ரஹ்மானைத் துதிசெய்யு மனமே—மஹ்ஷர்
நாளினில்ச்சொர்க்க நயம்பெறத்தினமே (ர)

மஹ்மூதர் உபதேசச் சுருதி நாலு
மறைகள் நிறைந்த குர்ஆன்ஞானப் பரிதி
தருமான மொழிமீதும் உறுதி வைத்து
தனியோனை யென்றுநெம் கல்பாரக் கருதி (ர)

கனிவா யனுதிக்குத் தொண்டு செய்து
கடைத்தே றுதற்குப் பணிமாலை விண்டு
நனிதீபச் சருவாதி பண்டு லாயி
லாஹா யில்லல்லாஹு வெனவோதிக்கொண்டு (ர)

எண்ணரி தாகிய நாமான் படைப்
பெல்லாம் படைத்த குதரத்தின் சீமான்
தண்ணருள் மேவிய பூமான் நேம
சற்சனர்க்கி கைத்தயாபரக் கோமான் (ர)

தோரணை பேசிநீ தேடிக் கொண்ட
துன்பப்பவங்கள் தொலைந்தோட நீடி
ஆரணு னுதியை நாடி. தினம்
அஞ்சலித்தே கெஞ்சிக் கெஞ்சி ம்ன்றாடி (ர)

அனியாய மனியாயப் பாவி நீ
யாகாமல் சரஹினின் ஆஜாரந் தாவி

தனியோனை யெப்போதும் சேவி யென்ற
தாஷால் நபியின் தலீல்களை மேவி (ர)

காவல னாதி பரிந்து புருக்
கான் மழையாகக் கருணை சொரிந்து
எவலின் தூதை யறிந்து தீனில்
ஈமானி சுலாமி ரண்டுந் தெரிந்து (ர)

வாணாளைப் பாழாக்கி டாமல் பெரும்
வல்லோன் நபிசொல்லைத் தள்ளிக் கெடாமல்
வீணாகி சோம்பற் படாமல் ஐந்து
வேளைத் தொழுகையை நித்தம் விடாமல் (ர)

பிறஹானும் காபிலு மெங்கே வெற்றி
பேசியசத் தாதும் அபுஜாஹி லெங்கே
மறமான நம்ரூது மெங்கே என்று
மனதா லறிந்துநீ துனியாவி லிங்கே (ர)

ஆதியம ரோர்கள் வேதம் திரு
அன்பியா மார்கள் அடங்கலும் போதம்
ஓதிய க்யாமம்வி ஞைகம் அன்று
உறுதியாம் மஹஷர்வி ஜாரணை நீதம் (ர)

கலிமாவும் தொழுகை யெடுத்து அருட்
கதிநோன்பும் வைத்துசக் காத்துங் கொடுத்து
வலுவாகில் ஹஜ்ஜும் தொடுத்து சர்வ
வல்லோனின் துணைபேணி நிதமே யடுத்து (ர)

தெய்வாதி சேவைக்கி யாத உலோப
சீமான்கள் கைப்பொருள் போலே யநீத
பொய்வாழும் நெஞ்சகர் சூத செயல்
போலுமி ராமல் நீயூராய வேத (ர)

குபுரானசெய லெண்ணம் விட்டு மறை
கூறும் ஈமானிசு லாத்துக் குட்பட்டு
இபுராஹீம் நபிபீடம் தொட்டு சர்வ
யேகச் சொரூபனை யிதையத்துள் நட்டு (ர)

நேசர்க் கிதங்கூர்வி சாலன் மறு
நீதிநெறி யில்நிகழ் பெரும் சீலன்
தேசமெங் கும்பரி பாலன் மிகு
தினின் தயாளமெய் வேதாநு கூலன் (ர)

தேயாக் கிருபை யனுதி என்றும்
திவ்யச் சுயம்பா திகழ்பொறி நீதி
மாயாவருட் பெருஞ் ஜோதி பாப்பன்
மரநகர்ச் சேகும தார்க்கரு ளாதி (ர)

---

(வெள்ளிமலை யொத்தபல மேடை)

இராகம்—இந்துஸ்தான் பியாக் தாளம்—ஆதி.

ஆதியிலனுதி யெனும் ஆதி புவி
யம்பர மெங்கும் நிறைந்த ஜோதி கோடி
யாகமங்கட் குமெட்டாது வாசமியங்கும் விஸ்தார
அதியே அதி பதியே

நீதியிலும் நீதிமறு நீதி முறை
நிர்க்குணநி ரஞ்சனப்ரக் யாதி யருள்
நின்னயமிகுக்க வுறை சொன்னபரி வுற்றமறை
நிதமே புகழ்ச் சதமே

கருணைக் குணமலிந்த ஞாயம் ஜீவ
காருண்யமிகுந் தசமு தாயம் கலை
கற்றுந்தெய்வ பூஜிதம்செய் சித்தந்திகழ் மாதவர்சங்
கதமே தருஞ் சிதமே

திருவுற்றொளிர் விளங்கும் லோலா எங்கள்
தீவினையெல்லா மழிக்கும் மூலா காரி
சிந்தைமகிழ் வாருங்கதை யுந்தவருந் தாதுமென
திடமே அரு ளிடமே

பொய்யகம் மறைந்தொளிரும்போதா பஞ்ச
பூதியமுங் கற்பிதவி னோதா பரி
பூரணக் குதாவுறைநி தானமளி யாறஹீமிப்
போதே ஜெக மீதே

வையகம் நிறைந்தரஹ்மானே சர்வ
வண்மைகொள்யா றப்பில் ஆலமீனே பாப்பன்
மாநகரின் சேருமதார் கோர்திணையருள் தருஞ்சீ
மானே யெங்கள் கோனே

---

(கோருங்கள் கோருங்கள் கோருங்களே.)

(இராகம்—இந்துஸ்தான் தோடி தாளம்—ஆதி.

பல்லவி.

ஞானம்மெய் ஞானம்மெய் ஞானமெய்யே—என்றும்
நான்பெற ஆதிநீ தானம்செய்யே
நாட்டிடும் பவனத்திடர்
காட்டிடும் மௌனச்சுடர் (ஞா)

தேனடர்ப் பூமதி னபுரி ராஜர்
செங்கோ லதிபதி யானவி ஷேஷர்
கானவன் தீன்பெற கருணைசெய் நேசர்
கதியருளும் குருநபியின்
அருள்வசனம் தனையறியும் (ஞா)

கோபக்க படப்பொ ருமையுந்திய
கொடுமை நீங்கிசற் குணநலந் தோய

ஞாபக முற்று ரஹீமெனந் தூய
நற்கருணை வைத்தருளும்
ஹக்க னுறை மெய்ச்சுருதி (ஞா)

காதகர் தீசெய லைத்தழு வாமல்
காத்திம் நபிசர ஹில்வழு வாமல்
வேதம் பணித்த விதிநழு வாமல்
வித்தகர் சொல் நத்தி யொரு
மித்து நய பக்தி செய (ஞா)

முச்சுடர் தீன்வரல் போதம் விளக்க
முஹம்மதர் சன்மார்க்கம் பயிராமுளைக்க
சற்சாரமாகச் சந் தானந் தழைக்க
சங்க தம டைந்து நய
முங்கிடவி ளங்கிடு மெய் (ஞா)

சாதைகநன் னீதத் தயாளந் தொடுக்க
தண்டமிழ்க் கீதத் தலில்களடுக்க
வாகைய ளித்திரு வாழ்ச்சிகொடுக்க
வளர் திணையும் பாலபெருகும்
கிருபை யுநும் சுருதிசொலும் (ஞா)

சித்தங் குவிந்த ஜெபதவத் தோர்க்கும்
தீனர்தாளர் ஈனர் செல்வர்மெயல் லோர்க்கும்
உத்தண்ட மீகையும் சேகும தார்க்கும்
உரிமை யுரும் படி திகழும்
சதுர் மறையின் திருவருளின் (ஞா)

——

(ஆலம்படைத்தவனே அல்லாஹு)

இராகம்—நாதநாமகிரியை தாளம்—ஆதி.

பல்லவி.

வான்புவியும் படைத்த வல்லோனே
மாக்ஷிமை மறையருட் சொல்லோனே (வா)

அநுபல்லவி.

தேன்பொழியும்மாமதிஞ திருநபிக்கும் தாயகனே
சேடணிவிசாலசர்வ ஜீவர்கட்கும் நாயகனே

வின்னமில்லாப் புவியில் வீணனெனவே யுதித்தேன்
வேதாகமங்கள் சொன்ன விதிகடந்து யான் சதித்தேன்
சன்னதங் கொண்டுநிதம் தனைமறந்துவீண் மதித்தேன்
தப்பிதமெல்லாம் க்ஷமிக்க ஹக்கனேயுனைத்துதித்தேன் (வா)

மன்னுதி மன்னர்கட்கும் மாமகிபச் செங்கோலா
வையகமெலாந் துதிக்கும் மநுதருமப் பரிபாலா
பன்னுளு மன்னு துதி பாவலர்க்கும் அநுகூலா
பாவியேன் பிழைபொருத்து பண்புதவி யருள்மூலா (வா)

எண்ணஞ்செயல்மொழியின் யேற்கையில்லாவென்பாவம்
யெளியேன் நிகழ்த்தியதால் யேகநாதன் உன்கோபம்
வண்ணம் அரூபமதாய் வறுத்துமஞ்தோ பரிதாபம்
மகத்துவனே ரக்ஷித்துசன் மார்க்கமருள் பிரதாபம் (வா)

மானிலமிதிற் கொடிய வறுமையின் அடாத்திருளே
வந்தடைந்து வீண்பயின்ற வல்வினைப்பவத் தெருளே
தீனிலனுகாதபடி சேமிதத் திருவருளே
தீக்ஷாதி புரியருவ ஷாக்ஷாத்காரப் பொருளே (வா)

பூராயவேத மெல்லாம் போற்றிடுங் குதாசதமே
புன்மையணு காதபடி நன்மையருள் வாய்நிதமே
சீராரும் பாப்பநகர் சேகுமதார் பூஜிதமே
செய்துவரப் பாதுகாத்து நயமதிசெய் பூர்ச்சிதமே (வா)

——

## மங்களவாழ்த்து.

(அமாரநபி தேரே)

இராகம்—இந்துஸ்தான் பியாக் தாளம்—ஆதி

பல்லவி.

சுபமங்களம் —ஆதி
தூதாம் முஹம்மதர்க்கும் (சுப)

அநுபல்லவி.

ஹிபத்தியாகி ரஹ்மான் உவர்க்கும்நபிகள் கோமான்
இருலோகப் பதிகட்கும் குருநாயக மவர்க்கும் (சுப)

உமர்மறையபூ பக்கர் உயர் உதுமான் அலி
ஜெயம்பெரு ஹஸ்யேனுஸ்ஸேன் செல்வர் களுக்குமலி (சுப)

சீர்பரவெழில் மக்கா திருக்குவை வீதளித்த
பார்புகழுங் கதிஜா பாத்திமநாக்ஷியர்க்கும் (சுப)

திறல்நபி தேவியர்க்கும் செல்வப் புதல்வர்கட்கும்
மறையிமாம்நால்வர்கட்கும் மஹாமுபூதர்மீதாழர்கட்கும் (சுப)

திருமலி முஹய்யதீனும் ஷெய்கப்துல் காதிறுக்கும்
தருமதி யாகநாகை ஷாஹுல் ஹமீதவர்க்கும் (சுப)

விளம்புதிரு புருக்கான் மெய் நெறியோர்க்கு நய
வளர்ந்திரீனைசீசகுமதார் வாழ்த்தும் சோபனஜெய (சுப

---

ஹஜரத்முகம்மது
அன்பியா துதி என்னும் ஆனந்தச் சங்கீதம்
முற்றுப்பெற்றது.

---

# பிழை திருத்தம்.

## சில பிரதிகளில் இருக்கும் முக்கியமான அச்சுப் பிழைகளின் திருத்தம்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 9 | 12 | நெஞசக | நெஞ்சக |
| 11 | 10 | சரன் | சரண் |
| 11 | 13 | யுந்ததும் | யுந்தும் |
| 11 | 18 | யென்றல் | தென்றல் |
| 26 | 11 | காப்பருவே | காப்பருளவே |
| 40 | 23 | சஞ்சத | சஞ்சல |
| 53 | 10 | திநீடுககின்ற | கதிநீடுகின்ற |
| 57 | 9 | குறிகாவ | குறிகாண |
| 80 | 8 | உவர்க்கும் | உவக்கும் |
| 80 | 10 | உமர்மறை | உயர்மறை |
| 80 | 10 | உயர்உதுமான் | உமருதமான் |

# விளம்பரம்.

ஐயா!

எங்களிடத்தில், வேதாந்த சித்தாந்த இதிகாச புராண காவியங்களும், டீகா உரைகளுடனும், பல நவீன நாவல்களும், சிற்றின்ப நூல், வைத்தியவாகடம், கூக்குறி, சமயற்பாக சாஸ்திரம், மெஸ் மெரிஸம், மாந்திரீக ஜாலம், ஜோதிட ஆருடம், (இலக்கண இலக்கிய) அகராதி நிகண்டு, ஒக்கப்ளேரி, இங்கிலீஷ் தமிழ் டிக்ஷனரி, தேசச் சரித்திரம், பூகோள சாஸ்திரங்களும்; ஆர்மோனிய சங்கீதம், கிராம்போன் சங்கீதம், பக்திரச கீர்த்தனங்களும்; நாடகவிலாச சரித்திரம், அம்மானை, அலங்காரம், கும்மி, சிந்து, ஒப்பாரி லாவணி விருத்தம், திருப்புகழ் தேவாரங்களும்; முஸ்லீம்களுக்கும், தெலுங்கர்களுக்கும் உரிய சில புஸ்தகங்களும்; ஸ்கூல் மாணவர்களுக்கு வேண்டிய நீதி நூற்சதகம், பாடம், வாசகம், கணிதம் இங்கிலீஷ் தமிழ் இங்பிரைமர் ரீடர் அச்செழுத்துக் காப்பிகள், பேனா, ஸ்டீல், பென்சல், இங்கு. பிளாட்டிங் பேப்பர்களும்; குயர்கணக்கு குறிப்பு, பேரேடு, பைண்டுபுத்தகங்களும்; வருடங்கள் தோறும் புதிய பஞ்சாங்கக் காலண்டர்களும்; கலர் போட்டோ, ரவிவர்மா பிரஸ்படங்களும்; பலவகையான வெண்கலப் பாத்திரங்களும், கதருடை தினுசுகளும், அத்தர், பன்னீர், ஊதுவத்தி, சந்தனவில்லை முதலிய வாசனைத் திரவியங்களும்; கருணைகந்தர் சஞ்சீவி மருந்துவகைகளும்; முந்திரிப் பருப்பு, சிவபுரிப் புகையிலைகளும்; இன்னும் அநேக விதமான சாமான்களும், எங்களிடம் நேரிலும், (C. O. D.) போஸ்டு மூலமாகவும், சலீசான விலைக்குக் கிடைக்கும். வியாபாரிகளுக்கும், உபாத்தியாயர்களுக்கும், தகுந்த கமிஷன் தரப்படும். கேட்லாக் இனம்.

மனோன்மணி விலாச புத்தகசாலை,
தபால் பெட்டி நெ. 141. கோலாலம்பூர். F. M. S.